விலை: 30.00 viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 26 வெள்ளிக்கிழமை (12.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 328

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

## 2022 ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட் இன்று

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணி அரசாங்கத்தின் 2022 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் கொத்தணி உருவாகும் அபாயம்

### பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ்தொற்று உறுதியாகும் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை உயர்வடைகின்றது எனப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் நாட்டில் மாணவர் கொத் 15

## யூரியா இறக்குமதி செய்யப்படுமா?

(கொழும்பு)

யூரியாவை இறக்குமதி செய்வதற்கான பிரேரணையை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக 15

மக்களை சூறையாடவே

## பொருட்களின் கட்டுப்பாட்டு விலையை அரசு நீக்கியது

### சபையில் முஜிபுர் ரஹ்மான்

(கொழும்பு)

அரசாங்கம் பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்கி மக்களைச் சூரையாட வியாபாரிகளுக்கு பூரண சுதந்திரத்தை வழங்கி இருக்கின்றது.

அதேபோன்று லிட்றோ கேஸ் நிறுவனத்தில் 15

## தமிழர்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும்


### இந்தியத் தூதுவரிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

**தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என இந்திய தூதுவரிடம் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவினருக்கும் இடையில் நேற்று முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் மாலை 5 மணி முதல் 7 மணி வரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. 15



## வவுனியாவில் 38 பேருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் 10 பேர் உட்பட 38 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். 15

## கொரோனா +527

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 527 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக சுகாதார அமை 15

## கொரோனா 19 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் ஆண்கள் 11 பேர் உட்பட மேலும் 19 பேர் கொரோனா 15

## புலனாய்வாளர்களை சஹ்ரான் சந்திக்கவில்லை

### சபையில் அமைச்சர் சரத் வீரசேகர

(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரான், புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த எவரையும் சந்திக்கவில்லை என்பது ஆதாரங்களின்படி தெரியவந்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் 15

ஒன்றுகூடல்கள் மற்றும் நிகழ்வுகளுக்கு

## உரிய அதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டும்

### விசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

ஒன்றுகூடல்கள் மற்றும் நிகழ்வுகளுக்கு உரிய அதிகாரிகளிடம் அனுமதி பெறுவதை கட்டாயமாக்கி தனிமைப்படுத்தல் மற 15

அனுராதபுரத்தில்

## 60 மாணவர்களுக்கு கொரோனா தொற்று

### 10 ஆசிரியர்களுக்கும் தொற்று

(கொழும்பு)

அனுராதபுரம் மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் என பாடசாலை சமூகத்தில் பலருக்கு கொரோனாத் தொற்று 15

## ராஜபக்ஷ அரசு தற்போது நாட்டிற்கு சாபமாக மாறி உள்ளது

### ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

(கொழும்பு)

சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்குவதாகக்கூறி ஆட்சிபீடமேறிய அரசாங்கம் தற்போது நாட்டிற்கான பெரும் சாபமாக மாறியிருக்கின்றது. குறிப்பாக அரசாங்கத்தின் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், நாட்டின் நிர்வாகத்துடன் தொடர்புடைய தீர்மானங்கள் அமைச்சரவையில் 15



# கண்ணீர் அஞ்சலி

செல்வி

## யோகேஸ்வரி தம்பிராசா

(ஓய்வுபெற்ற மனைப்பொருளியல் பாட ஆசிரிய ஆலோசகர், யாழ்.வலயம்)

**மண்ணில்: 02.03.1951 விண்ணில்: 11.11.2021**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்,**
**மனைப்பொருளியல் ஆசிரியர்கள்,**
**யாழ்.வலயம்.**

(8575)

# கேள்வி அறிவித்தல்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை
பளை பொதுச்சந்தையில் மரக்கறி சந்தை கட்டடத்தை இடித்து அகற்றுவதற்கான கேள்வி அறிவித்தல் - 2021

1. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 12.11.2021 - 22.11.2021
2. கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி :- 22.11.2021 மு.ப 10.00 மணி வரை
3. கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 22.11.2021 மு.ப 10.00 மணி
4. கேள்வி திறக்கப்படும் இடம் :- தலைமை அலுவலகம், பச்சிலைப் பள்ளி பிரதேச சபை, பளை

**நியந்தனைகள்:-**

1. **விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.**
2. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுக மளிப்பதோடு மீளளிக்கத்தக்க கேள்விவைப்பு பணமாக ரூ.500 இனை செலுத்துவதுடன் கேள்விப்படிவக் கட்டணமாக ரூ. 500 இனை செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
3. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை** எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத் தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 22.11.2021 மு.ப 10.00 மணிக்கு முன்னதாக இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி.** எனும் முக வரிக்கு 22.11.2021 மு.ப 10.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
4. கேள்விச்சித்திதாரராக தெரிவுசெய்யப்படுவோர் கேள்வித்தொகையினை 3 நாட்களுக்குள் முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக் கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை மேற்கொண்டு 2 வாரத்திற்குள் குறித்த வேலையை நிறைவேற்றுதல் வேண்டும்.
5. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் மேற்கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக் கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
6. கேள்விச்சித்திதாரராக தெரிவுசெய்யப்படுவோர் சந்தை கட்டடத்தை இடித்து கட்டட இடிபாடுகள் மற்றும் அதிலுள்ள பழைய பொருட்களை அகற்றி தாங்கள் பெற்றுக் கொள்வதோடு ஏற்கெனவே இயற்கையாகவுள்ள நிலமட்டத்திற்கு நிலத்தை சீராக்கவேண்டும்.
7. சமர்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
8. மேலதிக தகவல்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்பு பணம் |
|---|---|---|---|
| 01. | பளை பொதுச்சந்தையில் மரக்கறிச் சந்தை கட்டடத்தை இடித்து அகற்றுதல் | 28,394.00 | 500.00 |

**சுப்பிரமணியம் சுரேன்,**
**தவிசாளர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

(C-2990)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## யா/புற்றளை மகா வித்தியாலயம்

### மதில் அமைப்பதற்கான கூலி ஒப்பந்தம் கோரல்

எமது பாடசாலையின் 150 அடி நீளமான எல்லைச் சுவரை (மதில்) புதிதாக அமைப்பதற்கு கூலி ஒப்பந்தத்திற்கான கூறு விலை கோரப்படுகிறது. ஒப்பந்தகாரர் கூறுவிலைகளை முழுமையான விபரங்களுடன் 24.11.2021ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், பழைய மாணவர் சங்கம், யா/புற்றளை மகா வித்தியாலயம், புலோலி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


**தலைவர், பழைய மாணவர் சங்கம்,**
**யா/புற்றளை மகா வித்தியாலயம், புலோலி.**

(C-2994)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 11.10.2021 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சுப்பிரமணியம் தங்கராசா



**(ஓய்வுபெற்ற கணித ஆசிரியர், பிரதி அதிபர்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (10.11.2021) புதன்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது.
இன்று (12.11.2021) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**"தங்கநிலா" வதிரி** **குடும்பத்தினர்**

(C-2996)

# மணிவிழா வாழ்த்து



## திருமதி தெய்வநாயகி வீரசிங்கம்

விதை முளைத்து விருட்சமாக
வியர்வையுரம் இட்டவரே! கல்விக்
கோபுரங்கள் விண் தொடவே
அத்திவாரம் என்றும் நீங்களே!
சீர்மிக்க சேவையினால்
உங்கள் ஓய்வுக்காலம்
மகிழ்வுடனேதான் கழிய
சிரம் பணிந்து வாழ்த்துகின்றோம்...

**சேவை விபரம்**

1. நு/கோட்லோஜ் தமிழ் வித்தியாலயம் 05.08.1985 - 15.11.1987
2. நு/கிறேட் வெஸ்ரன் தமிழ் வித்தியாலயம் 16.11.1987 - 23.05.1993
3. மு/பாரதி வித்தியாலயம் 24.05.1993 - 30.10.1993
4. மு/விசுவமடு மகா வித்தியாலயம் 01.11.1993 - 14.05.2005
5. மு/பாரதி வித்தியாலயம் 15.05.2005 - 30.09.2005
6. மு/விசுவமடு மகா வித்தியாலயம் 01.10.2005 - 31.12.2012
7. மு/உடையார்கட்டு அ.த.க. பாடசாலை 02.01.2013 - 14.02.2013
8. மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை 15.02.2013 - 05.04.2018
9. யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் 06.04.2018 - 01.01.2020
10. மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை 02.01.2020 - 11.11.2021

*வாழ்த்துவோர்:*
**மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை**
**(அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்)**
**விசுவநாதர் நிதியம்**


(C-2992)

# நான்கு நாட்களுக்கு போதுமான குருதியே கையிருப்பில் உள்ளது!

## இரத்ததானம் வழங்க முன்வாருங்கள் யாழ்.போதனா இரத்த வங்கி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த குருதியின் அளவு 330 பைந்த். ஆனால் தற்போது இருக்கும் குருதியின் அளவோ 200 பைந்த் ஆகும். இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியாத நிலையிலும் இருக்கின்ற குருதி இன்னும் 4 நாட்களுக்கு மட்டுமே போதுமானது எனவும் இரத்த வங்கி அறிவித்துள்ளது.**



4 நாட்க்ளுக்கு பின் ஏற்படுகின்ற அனர்த்தங்களுக்கோ அல்லது விபத்திற்களுக்கோ, சத்திர சிகிச்சைகளுக்கோ, மகப்பேற்று சத்திர சிகிச்சைகளுக்கோ, குருதிச் சோகை நோயாளர்களுக்கோ மற்றும் ஏனைய நோயாளர்களுக்கோ குருதியை வழங்க முடியாத ஆபத்தான நிலைக்கு இரத்த வங்கி தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலை ஏற்படுகின்ற சந்தர்ப்பங்க ளில் முதலில் மருத்துவ மனை ஊழியர்கள் மற்றும் மருத்துவ பீட மாணவர்களின் ஒத்துழைப்பு பெறப்படுவது வழமை. ஆனால் தற்போது சுகாதாரத்துறை சார்ந்தவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்படுவதால் ஒரு வாரத்திற்கு அவர்களிடமிருந்து குருதியைப் பெற முடியாது.

எனவே தற்போது ஏற்பட்டிருக்கும் இந்த ஆபத்தான நிலையை உடனடியாக தவிர்ப்பதற்கு வட மாகாணத்திலுள்ள இளைஞர், யுவதிகள் இரத்ததானம் செய்வதற்கு முன்வர வேண்டும் எனவும் இரத்ததானம் செய்வது தொடர்பாக 021 222 3063 , 077 210 5375 ஆகிய தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இரத்த வங்கி அறிவித்துள்ளது.(4-5-33)

## இரத்ததானம்

(குப்பிழான்)

தற்போது யாழில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு கோண்டாவில் மக்கள் முன்னேற்றக் கழகமும், துர்க்கா விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் இரத்ததான முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை கே.கே.எஸ். வீதி கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள மக்கள் முன்னேற்றக் கழகச் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-5-18)

## வவுனியா

## ஆரம்பப்பிரிவு பாடசாலையில் 10 பேருக்கு கொவிட் தொற்று

(குருமன்காடு)

ஆரம்பப் பிரிவுக்களுக்கான பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வவுனியா மாவட்டத்தில் இரு ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கும், 8 மாணவர்களுக்கும் இதுவரை கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

உடல் நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டதை அடுத்து மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் போதே அவர்களுக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

எனவே, பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றி செயற்படுமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர். (4-5-250)

## மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபருக்கு கொவிட் தொற்று

(குருமன்காடு)

மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-5-250)




அடுத்த ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தில் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபாய் இடைக்கால கொடுப்பனவு வழங்குவதற்கு அவசியமான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி நேற்று வியாழக்கிழமை காணாமல் போனோரின் குடும்ப ஒன்றியத்தால் நீதியமைச்சு, நிதியமைச்சு மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவற்றுக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

## இரண்டு மாடிக் கட்டடம் இடிந்து முற்றாக சேதம்



(ஹற்றன்)

கம்பளை - நுவரெலியா பிரதான வீதியில் அட்டபாகை பிரதேசத்தில் 2 மாடி வர்த்தக நிலையமொன்று இடிந்து விழுந்து முற்றாக சேதமடைந்துள்ளது. நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையின் காரணமாகவே நேற்று முன்தினம் இரவு மேற்படி வர்த்தக நிலையம் முற்றாக சரிந்து விழுந்துள்ளது. வர்த்தக நிலையத்திற்குள் இருந்த பொருட்கள் அனைத்தும் மண்ணுக்குள் புதையுண்டுள்ளன.

வர்த்தக நிலையத்தில் இருந்த தாய், தந்தை மற்றும் மகன் ஆகியோர் வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு, உறவினர்கள் வீட்டுக்கு செல்வதற்கு வெளியே வந்த தருணத்திலேயே இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது. இதனால் மூவரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். (நி-5)


மணிவிழா வாழ்த்து



திருமதி. சறோசா கோடீஸ்வரன்
(SLTS-1)
(பயிற்றப்பட்ட வர்த்தகம்)

சேவை விபரம்

| | |
|---|---|
| யா/ மந்துவில் சிறீ பாரதி வித்தியாலயம் | -17.08.1988-31.12.1991 |
| யா/பலாலி ஆசிரியர் கலாசாலை | -01.01.1992-31.12.1993 |
| யா/ மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் | -01.01.1994-06.03.2006 |
| யா/மந்துவில் றோ.க.த.க.பாடசாலை | -07.03.2006-11.05.2011 |
| யா/ மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் | -12.05.2011-31.12.2013 |
| யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம் | -01.01.2014-11.11.2021 |

எமது பாடசாலையில் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் பணியாற்றி 12.11.2021 இன்று ஓய்வுபெற்றதையிட்டு அவரின் சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
(8557) யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

# இருபது-20 உலகக்கிண்ணம் இறுதிக்குள் நியூஸிலாந்து



இருபது-20 உலகக்கிண்ணத் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில், நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் நியூஸிலாந்து அணி, இருபது-20 உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

அத்துடன் கேன் வில்லியம்சன் தலைமையில் தொடர்ச்சியாக 50 ஓவர்கள் உலகக் கிண்ணம், ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் மற்றும் இருபது-20 உலகக்கிண்ணம் என மூன்று தொடர்களில் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. இதில் இந்தியாவை வீழ்த்தி ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை முதல் முறையாக வென்றது.

அபுதாபியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நியூஸிலாந்து கிரிக்கெட் அணியும் இங்கிலாந்து அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து கிரிக்கெட் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 166 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மொயின் அலி தனது முதலாவது இருபது-20 உலகக்கிண்ண தொடரின் அரைச்சதத்தை பதிவு செய்தார். அவர் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். மேலும், டாவிட் மாலன் 41 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், டிம் சவுத்தீ, ஆடம் மில்ன், இஷ் சோதி மற்றும் ஜிம்மி நீஷம் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 167 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நியூஸிலாந்து கிரிக்கெட் அணி, 19 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 167 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதனால் நியூஸிலாந்து கிரிக்கெட் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 47 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 72 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட டேரில் மிட்செல் தெரிவு செய்யப்பட்டார். (4-6)

# பெறுகை அறிவித்தல்

## சபை நிதி வேலைத்திட்டம் - 2021
## நகராட்சி மன்றம் - சாவகச்சேரி

1. தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்கள் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

2. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

3. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வேலைத்திட்டங்களுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாணதொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

4. தேவையான தகைமைகள், **கேள்வி ஆவணம் பகுதி** 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) **கேள்வி ஆவணம் பகுதி** 5 இல் காட்டப்பட்டுள்ளது.

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி, **தொலைபேசி - 021 227 0041, தொலைநகல் - 021 227 0079, மின்னஞ்சல்: chavauc@gmail.com** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் **2021.11.12** ஆம் திகதியிலிருந்து **2021.11.26** ஆம் திகதி வரை **மு.ப 9.00** மணி முதல் **14.00** மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணமொன்றை **தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி** இடமிருந்து வேலை நாட்களில் **2021.11.12** ஆம் திகதியிலிருந்து **2021.11.26** ஆம் திகதி வரை மு.ப **9.00** மணிக்கும் **14.00** மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா.2000/-** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

7. கேள்விகளை இரு பிரதிகளில் தயாரித்து கோரப்படும் ஆவணங்களுடன் தனித்தனியாக இரு உறைகளில் இட்டு **தலைவர், பெறுகைக் குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி** எனும் முகவரிக்கு **2021.11.26** ஆம் திகதி **14.30** மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

8. கீழ்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது 2022.01.14) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.

9. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள் கேள்விகோரவோ பெறுகைக் குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2021.11.19 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ள முடியும்.

11. கலந்துகொள்ளும் நபர்கள் நாட்டில் காணப்படும் அசாதாரண சூழ்நிலையை கருத்தில்கொண்டு உரிய சுகாதார விதிமுறைகளை பின்பற்றி கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணைவைப்பு (ரூபா) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைவைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(3)2/ CF/25/2021 | சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானத்தில் மதகு அமைத்தல். சாவகச்சேரி நகரம். | 0.519 | 03 மாதம் | C9/C8 | 5,200.00 | 2022.02.10 |
| 02 | NP/14/41(3)2/ CF/26/2021 | சாவகச்சேரி பொது விளையாட்டு மைதான காணிக்கு வேலி அமைத்தல், சாவகச்சேரி நகரம். | 1.293 | 03 மாதம் | C9/C8 | 13,000.00 | 2022.02.10 |
| 03 | NP/14/41(3)2/ CF/27/2021 | சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கு சொந்தமான காணிகளுக்கு எல்லைக்கற்கள் அமைத்தல். | 0.381 | 03 மாதம் | C9/C8 | 3,900.00 | 2022.02.10 |
| 04 | NP/14/41(3)2/ CF/28/2021 | தொழிலாளர் பகுதி அமைத்தல், கோவிற்குடியிருப்பு. | 1.659 | 03 மாதம் | C9/C8 | 16,600.00 | 2022.02.10 |
| 05 | NP/14/41(3)2/ CF/29/2021 | திண்மக்கழிவு முகாமைத்துவ பகுதி பாதுகாப்பு அலுவலர் கொட்டகை மற்றும் கேற் அமைத்தல், கோவிற் குடியிருப்பு. | 1.353 | 03 மாதம் | C9/C8 | 13,600.00 | 2022.02.10 |
| 06 | NP/14/41(3)2/ CF/30/2021 | விஜயா வீதி வலது பக்க 1 ஆம் ஒழுங்கை புனரமைத்தல், நுணாவில் கிழக்கு. | 1.089 | 03 மாதம் | C9/C8 | 10,900.00 | 2022.02.10 |

**தலைவர், பெறுகைக்குழு,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**
**12.11.2021**

(C-2991)

# இளவயது நீதிபதியாக யாழைச் சேர்ந்த பிரதீபன் தெரிவு



(யாழ்ப்பாணம்) இலங்கையின் மிக இளவயது நீதிபதியாக யாழைச் சேர்ந்த தர்மலிங்கம் பிரதீபன் தெரிவாகியுள்ளார். இலங்கையில் நீதிபதிகளாக தெரிவானோர் விபரம் நேற்று வெளியாகியது. இதில் 32 வயதுடைய தர்மலிங்கம் பிரதீபன் நீதிபதியாக தெரிவாகியுள்ளார்.

இவர் சாவகச்சேரியின் கல்வயல் கிராமத்தில் பிறந்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரிகளில் பயின்றுள்ளார். இலங்கைச் சட்டக்கல்லூரியில் பயின்று சட்டத்தரணியானார்.

இவர் மேற்கு லண்டன் பல்கலையில் சட்டத்துறையில் சர்வதேச வர்த்தக துறையில் முதுமாணி (LLM) பட்டம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# இராசிபலன்

12.11.2021
ஐப்பசி 26, வெள்ளிக்கிழமை
அட்டமி முற்பகல் 11.25 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 8.19 மணிவரை
சுபநேரம் 6.06-7.36 மணிவரை
இராகுகாலம் 10.36-12.06 மணிவரை
சந்திராஷ்டமம்: புனர்பூசம், பூசம்

வளவன்


மேஷம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


ரிஷபம்

செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை கிடைக்கும், ஆரோக்கியமான நாள்.


மிதுனம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.


கடகம்

கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம், ரோக பயமுண்டு.


சிம்மம்

குடும்பத்தினரிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


கன்னி

இனத்தார் பகை மாறி இன்பங்கள் கூடும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், கடன் பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.


துலாம்

வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


விருச்சிகம்

சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


தனுசு

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உடன் பிறப்புகள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வியாபார விரோதம் விலகும்.


மகரம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.


கும்பம்

சான்றோர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


மீனம்

எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

நீ நினைத்தால் எல்லாருக்கும் எல்லாமுமாய் வாழலாம்

# புலம்பெயர் தமிழ் அமைப்புகள் நாட்டிற்கு வளமா? சுமையா?

## நிதி அமைச்சர் தீர்மானிக்க வேண்டும்

**(கொழும்பு)**

**உலகில் உள்ள மிகப்பெரிய புலம்பெயர் அமைப்புகளில் இலங்கையின் தமிழ் புலம்பெயர் அமைப்பும் ஒன்றாகும். இவர்கள் கல்வி, திறமை, நிதி ரீதியில் பலமாகவும் உள்ளனர். இவர்களால் நாட்டிற்கு உதவி செய்ய முடியும். எனவே அவர்கள் குறித்து நிதி அமைச்சர் சிந்திக்க வேண்டும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன சபையில் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை, ஒதுக்கீட்டு (திருத்த) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு இன்று பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க நேர்ந்துள்ளது. இன்றுள்ள சவால்களில் ஜனாதிபதியினால் கொவிட் சவால்களை மட்டுமே வெற்றி கொள்ள முடிந்துள்ளது. ஏனைய சகல சவால்களும் இந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டவையாகும்.

இனவாதம் மற்றும் பிரிவினைவாதத்தை நாட்டில் பரப்பியுள்ளனர். இனவாதத்தையும் பிரிவினைவாதத்தையும் அரசியலுக்காக பயன்படுத்துவதை நாம் நிராகரிக்க வேண்டும்.

புலம்பெயர் தமிழர் அமைப்புகள் என அடையாளப்படுத்தினாலும் பெரும்பாலான தமிழ் புலம்பெயர் அமைப்புகள் நாட்டை நேசிக்கும் தரப்பாகவே உள்ளன.

எனவே புலம்பெயர் அமைப்புகள் நாட்டுக்கு வளமா? அல்லது சுமையா? என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும்.

நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. இது எங்கு சென்று முடியும் எனத் தெரியவில்லை. இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை என்றால் மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடும் நிலைமை உருவாகும்.

இவை அனைத்துமே இயற்கையாக உருவான பிரச்சினை அல்ல. தீர்வு காணக்கூடிய பிரச்சினைகளே எம்முன் உள்ளது. எனவே இதனை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை கருத்தில் கொண்டு பொருத்தமான வரவு- செலவுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.(நி-5)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
15
07
1953

மறைவு
14
10
2021

14.10.2021 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர். செல்வி. நடனவதி முருகேசு

(ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 11.11.2021 வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. நாளை 13.11.2021 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். அன்னார் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களுக்கும், துண்டுப்பிரசுரம் பதாகைகள் வெளியிட்டவர்களுக்கும் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

448/8, தர்மபுரம்,
கிளிநொச்சி.

(8565)

குடும்பத்தினர்

# கடந்த வருடம் அழிவடைந்த பயிர்களுக்கு இன்று வரை நட்டஈடு வழங்கப்படவில்லை

## எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பு

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பிற்குட்பட்ட ஒட்டுவெளி, செட்டிக்கேணி, குஞ்சு விழுபளை மற்றும் பெரிய விழுபளை ஆகிய வயல் நிலங்களில் செய்கை செய்யப்பட்ட நெற் பயிர்கள் முழுமையாக நீரில் மூழ்கி அழிவை எதிர்நோக்கி இருப்பதாக கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்தார்.

கமக்கார அமைப்பின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் வயல் நிலங்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு பயிரழிவு தொடர்பாக சாவகச்சேரி கமநல சேவை நிலையம் மற்றும் கமநல திணைக்கள உதவி ஆணையாளர் ஆகியோருக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவித்தனர். கடந்த வருடமும் இதுபோன்று வெள்ளத்தில் மூழ்கி அழிவடைந்த நெற் பயிர்கள் தொடர்பான அறிக்கை சமர்ப்பித்தும் இன்று வரை பயிரழிவுக்கான நட்டஈடு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (4-5-30)

## வெள்ளம், கடல் பெருக்கு

# மகிழங்கேணி கிராமத்தில் 9 குடும்பங்கள் இடம்பெயர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோவிற் குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவின் மகிழங்கேணி கிராமத்தில் மழை வெள்ளம் மற்றும் கடல் பெருக்கு காரணமாக 9 குடும்பங்கள் இடம்பெயர் வினை சந்தித்துள்ளன.

மகிழங்கேணி கிராமத்தில் கடல் நீர் தடுப்பு அணை இல்லாத காரணத்தினால் ஒவ்வொரு வருடமும் மாரி காலத்தில் அங்குள்ள சுமார் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளப் பிரச்சினையை எதிர் கொண்டு வருகின்றன.

அதேபோன்று இம்முறையும் கடந்த தினங்களில் பெய்த கனமழையால் 9 குடும்பங்கள் இடம்பெயர்ந்து கிராமத்தில் உள்ள சனசமூக நிலையம் ஒன்றில் தஞ்சமடைந்துள்ளனர். (4-5-30)

# பூநகரி கோட்டையை அண்மித்து பொழுதுபோக்குப் பூங்கா

## அமைச்சர் விதுர இணக்கம்

(முறிகண்டி)

பூநகரி கோட்டையைப் பாதுகாப்பதுடன், அதனை அண்மித்து பொழுதுபோக்கு பூங்கா ஒன்றை அமைப்பது தொடர்பில் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க சம்மதம் தெரிவித்தார்.

கிளிநொச்சிக்கு கடந்த 4 ஆம் திகதி விஜயம் மேற் கொண்ட தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவிடம் பூநகரி வாடியடி பகுதியில் அமைந்துள்ள கோட்டையைப் பாதுகாப்பதுடன், அதன் தொன்மையையும் பாதுகாத்து, அப்பகுதியை அண்மித்து சிறுவர் பூங்கா ஒன்றை அமைப்பதற்கு அனுமதிக்குமாறு பூநகரி பிரதேச சபை உறுப்பினரும், பூநகரி பிரதேச செயலாளரும் அமைச்சரிடம் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்தனர்.

குறித்த பூங்கா அமைப்பதற்கு உரிய முறையில் திட்டத்தினை தொல்பொருள் திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறும், அதற்கான அனுமதியை வழங்குவது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# கிளி/ சேரன்பற்று சி.சி.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று

(கிளிநொச்சி)

கிளி/சேரன்பற்று சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் நடராசா ராமதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய ஆரம்பப்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உதவிக்கல்விப்பணிப்பாளர் சிகணேசலிங்கம், சிறப்பு விருந்தினராக பளை கோட்டக் கல்விப்பணிப்பாளர் தி.திலீபன், கௌரவ விருந்தினராக பழைய மாணவன் செ.கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-5)

# அரங்க கதையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் மெய்நிகர் இணையவழி அரங்க கதையாடல் 43 ஆவது நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261 கடவுச்சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அறிவித்துள்ளனர். (4-5)

# விளையாட்டுத்திடல் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்திடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது என ஐக்கிய இராச்சிய கிளையின் தலைவர் எஸ்.ஜெயபிரகாஷ் தெரிவித்தார்.

பாடசாலைக்கான மைதானம் என்ற வகையில் வெளிப் பாடசாலைகள் இப் புதிய திடலை பயன்படுத்த விரும்பின் பாடசாலை நிர்வாகத்தினரிடம் உரிய அனுமதி பெறல் வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-5-33-18)

# கமநல சேவைகள் நிலையம் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டால் நட்டஈடு

## கமநல சேவைகள் திணைக்களப் பணிப்பாளர்

(கண்டாவளை)

பயிர் நிலங்கள் அழிவடைந்துள்ளதை கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டால் விவசாயிகளுக்குரிய நட்டஈடுகளை வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுப்போம் என முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்த கன மழையால் நந்திக்கடலின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது. இதனால் நந்திக்கடலுக்கு அருகேயுள்ள வயல் நிலங்கள் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

இவ்வாறு அழிந்த பயிர்ச் செய்கைகளுக்கு உரிய நட்டஈடுகளை உரியவர்கள் வழங்க முன்வர வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இவ்விடயம் தொடர்பில் கமநல சேவைகள் திணைக்களப் பணிப்பாளரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (4-5-315)



முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சஞ்சய வணசிங்க மற்றும் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோருக்கிடையே நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றது.

(படம்:-தேவானந்தன்)

# இருவருக்கு தொற்று மூடப்பட்டது அலுவலகம்

(நெளுக்குளம்)

வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து திணைக்களம் மூடப்பட்டுள்ளதுடன், பணியாளர்களை வீட்டிலிருந்து கடமையாற்றுவதற்கு பணிக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் தேவை நிமித்தம் திணைக்களத்திற்குச் செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (4-5-299)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 170 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 180 | 180 |
| தக்காளி | 550 | 450 | 400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 50 |
| கோவா | 200 | 140 | 170 | 200 |
| கரட் | 160 | 250 | 250 | 300 |
| பூசணி | 60 | 50 | 60 | 60 |
| புடோல் | 200 | 240 | 170 | 160 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 150-220 | 250 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 150-200 | 180 |
| பாகற்காய் | 550 | 550 | 450 | 600 |
| வெண்டிக்காய் | 140 | 240 | 120 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 150 |
| பயற்றங்காய் | 600 | 600 | 500 | 400 |
| லீக்ஸ் | 250 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 120 | 70 | 60 | 60 |
| கறிமிளகாய் | 400 | 400 | 320 | 350 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 480 |
| போஞ்சி | 350 | 350 | 380 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 160 | - | 160 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 120 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 60-90 | 50-70 |
| இராசவள்ளி | 250 | 260 | 230 | 300 |
| வெங்காயப்பூ | -- | 360 | - | 280 |
| முள்ளங்கி | 140 | 140 | - | 140 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 80 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | - | - | 140 |

# மணிவிழாவும் சேவைநயப்பும்



திருமதி. **தேவகி புவனேஸ்வரன்**

B.A. (Hons) Dip.in.Edu, SLPS-I

## சேவை விபரம்

சேவை முன் பயிற்சி- 14.12.1987-31.01.1988

கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க. பா- 1988.02.01-1991.01.16

கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி (ஆசிரியர், பதில் அதிபர், பிரதி அதிபர்) 1991.01.17-2000.08.03

கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி (அதிபர் 2II) 04.08.2000-09.01.2007)

கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் -10.01.2007-27.10.2009

அதிபர் I- 02.07.2008

யா/சுன்னாகம் றோ.க.த.க பாடசாலை (அதிபர்)- 28.10.2009-17.10.2010

யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம் 18.10.2010 - 11.11.2021

### மணிவிழா சிறக்க மகிழ்வான வாழ்த்துக்கள்



கிளிநொச்சி மாவட்டத்தின் முதல் நிலைப் பாடசாலைகளுள் ஒன்றான கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் ஆசிரியராக, பிரதி அதிபராக, பதில் அதிபராக, கல்லூரி முதல்வராக இருந்து அப்பள்ளியின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் தன் உழைப்பை உரமாக்கி கல்லூரித்தாயின் பெயரை உச்சம் தொட வைத்த பெருமை திருவாட்டி தேவகி புவனேஸ்வரன் அவர்களைச் சார்ந்ததே! போரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் இடம்பெயர்ந்திருந்த மாணவர்களை ஒன்றுதிரட்டி ஆனைவிழுந்தானில் அப்பள்ளியை மீள ஆரம்பித்து, அசாத்திய மொன்றை சாத்திய மாக்கியதன் மூலம் தன்னை ஓர் ஆளுமையும் செயற்றிறனும் நிறைந்த பெண் அதிபராக அடையாளப்படுத்தியிருந்தமையை அப்பள்ளியின் பழைய மாணவனாக நான் பெருமிதத்தோடு நினைவு கொள்கிறேன்.

தலைசிறந்த அதிபராக, அடையாளப்படுத்திச் சொல்லத்தக்க பெண் ஆளுமையாக, தலைமை த்துவத்தின் அடையாளமாக, அன்பும், அறனும் தன்னிதயத்தில் சுமந்த சமூக சிந்தனையாளராக விளங்கியதனூடு அத்தனைபேரின் ஆழ்மனங்களிலும் நீங்காது நிலைபெற்று, குருத்துவத்தின் அடையாளமாக மிளிரும் அதிபர் திருவாட்டி தேவகி புவனேஸ்வரன் அவர்களின் மணிவிழா சிறக்கவும் ஓய்வுக்காலம் ஒளிமயமாயிருக்கவும் உளம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

**சிவஞானம் சிறீதரன், பாராளுமன்ற உறுப்பினர்,**
**யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம், கிளிநொச்சி.**

### சேவை நலன் பாராட்டு




கல்விப் புலத்தில் 12 வருட அர்ப்பணிப்பு மிக்க சேவைக்காலத்தினை ஆசிரியராகவும் 21 வருட சேவைக்காலத்தினை அதிபராகவும் மாண்புறு கடமையாற்றி கல்விச் சேவையிலிருந்து ஓய்வுபெறும் தங்களை வாழ்த்து வதில் பெருமையடைகின்றேன்.

அதிபர் அவர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கு இதுவரை காலமும் ஆற்றிய அர்ப்பணிப்புமிக்க சேவைகள் போற்றுதற்குரியவையாகும். இடர்மிகுந்த காலங்களிலும் இவர்களது சேவை பாராட்டுக்குரியதாகும். எளிமை, நேர்மை, உண்மை இவைகள் வெறும் வார்த்தைகளாக இல்லாமல் இவர்கள் சேவையில் வாழ்ந்து காட்டிய நெறிகளாகும். இவர்களது ஓய்வுக்காலம் மிகுந்த மகிழ்ச்சியுடனும் உடல், உள ஆரோக்கியத்துடனும் இனிதே வாழ எல்லாம் வல்ல இறைவன் அருளாசி கிடைக்க வேண்டுவதுடன் ஓய்வுக்காலம் சிறக்க இனிதே வாழ்த்துகின்றேன்.

**பொ.ரவிச்சந்திரன், வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்.**

### அறுபதாவது அகவைகாணும் அதிபருக்கான வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் பாடத்தில் சிறப்புப் பட்டத்தைப் பெற்று பட்டதாரி ஆசிரியராக கிளிநொச்சி மாவட்டத்தில் கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலையில் தனது முதல் நியமனத்தைப் பெற்றுக் கொண்டவர்.

பொருளியல் பாடத்தில் ஆசிரியை கொண்டிருந்த ஆற்றல்களை நன்குணர்ந்து அவரை 1991 ஆம் ஆண்டு கிளிநொச்சி வலயத்தில் அதிகூடிய மாணவர்களையுடைய இந்துக் கல்லூரியின் பொருளியல் ஆசிரியையாக நியமனத்தை வழங்கினர். இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி வலயத்தில் அதிகூடிய மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் ஒரு பாடசாலையாக இந்துக் கல்லூரியை மாற்றிய பெருமை திருமதி தேவகி புவனேஸ்வரனுக்கு கிடைத்தது. பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பெற்றோரும் அவரைப் பாராட்டி விழா எடுத்தமை அதற்கு ஒரு சான்றாகும்.

திருமதி தேவகி புவனேஸ்வரன் 2007 ஆம் ஆண்டு தைமாதம் கனகபுரம் மகா வித்தியின் அதிபராகப் பதவியேற்றார். இவ் ஆண்டு இப்பாடசாலையின் மாணவர் தொகை சுமார் 2500 ஆக விளங்கியது. அதிகூடிய க.பொ.த. உயர்தர மாணவர்களை உடைய ஒரு பாடசாலையாகவும் விளங்கியது.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் சுமார் 21 வருடங்களாக ஆசிரியராகவும் சிறந்த முதற்தர அதிபராகவும் பதவி வகித்து தற்போது யா/ ஏழாலை சைவமகாஜன வித்தியாலயத்தில் அதிபர் பதவியில் ஓய்வுபெறும் இவரை ஓய்வுக்காலத்தில் பல வளங்களையும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகிறேன். அதிபரின் ஆசிரியப் பணி, அதிபர் பணி, அவற்றில் காணப்பட்ட பன்முக நிர்வாக ஆற்றல்களையும் அதிபர்கள் கற்றுக் கொள்ளவேண்டும் எனவும் விரும்புகிறேன்.

**ப.அரியரத்தினம், முன்னாள் கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர்,**
**மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்.**

### மணிவிழா நாயகியே வாழிய வாழீ



கல்வியின் விளை நிலமாம் யாழ்.மண்ணிலே புகழ் பூத்த பாடசாலையாகிய ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்தினை தலைமை தாங்கிய அதிபர் வரிசையிலே திருமதி தேவகி புவனேஸ்வரனும் ஒருவராவர். இவரது ஆசிரியப் பணி அதிகஷ்டப் பிரதேசமாகிய வன்னி மண்ணிலே அமைந்தாலும் கிளிநொச்சியிலே புகழ் பூத்த பாடசாலைகளில் அதிபர் பணியை ஆரம்பிக்கும் பேற்றினைப் பெற்றவர். பெண் தலைமைத்துப் பணியிலே சிறந்த நுட்பங்களைப் கையாண்டு தன்னார்வப் பணிகளையும் பல்வேறு பொதுப் பணிகளையும் புரிந்தவர். "பதவிகள் வந்திட்டால் பணிவு கொள்ள வேண்டும்" என்ற மந்திர வாக்கியத்தினை இறுதிவரை தன் பணியின் பொருட்டு கைக்கொண்டவர். இதன் பயனால் அனைவருடனும் இன் முகத்துடன் பழகும் பேற்றினைப் பெற்றவர். வித்தியாலயத்திற்கு பல சிறந்த பணிகளை முன்னெடுத்தும் எதிர்காலச் சிறப்பிற்கு பல திட்டங்களையும் முன்னெடுத்துள்ளார்.

அவரது ப்ன்முகப்பட்ட பணி மென்மேலும் வளர்ந்து அவரது சேவை எமது கல்விப் புலத்திற்குத் தேவை எனக்கூறி அவரது ஓய்வுக்காலம் நோய் நொடிகள் இன்றி தன் குடும்பத்துடன் இனிது வாழ இறைவனை வேண்டி நல்வாழ்த்துக்களையும் கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**தலைவர், ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**

### மணிவிழா சிறக்க மகிழ்வான வாழ்த்துக்கள்



அதிபர் பெருமகள் திருமகள் தேவகி புவனேஸ்வரன் அவர்கள் தனது மகத்தான பணியை நிறைவு செய்து ஓய்வு நிலைக்குச் செல்கிறார் என்ற செய்தி காதில் எட்டியதும் எம்முடன் சமகாலத்திலே பணியாற்றியவர்களில் பலர் ஓய்வு நிலையை எட்டுகிறார்கள் என்ற எண்ணம் மனதில் பல சுவையான வரலாற்றுப் பதிவுகளை ஏற்படுத்துகிறது.

அதிபர் தேவகி அவர்கள் கிளிநொச்சியில் 1988 ஆம் ஆண்டு கனகாம்பிகைக்குளம் பள்ளியில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்து பின்னர் கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் தனது சேவையைத் தொடர்ந்து அக்கல்லூரியிலே அதிபர் பதவியை அலங்கரித்து பின்னர் கனகபுரம் மகா வித்தியின் அதிபராகப் பொறுப்பெடுத்த வேளையில் நாட்டின் நிலை மாறியதன் காரணமாகத் தனது பெற்றோருடன் இடம்பெயர்ந்து மிகுந்த சுமைகளைத் தாங்கி இறுதியுத்தத்தில் மிகுந்த வேதனையுற்றவர்.

அளவிட முடியாத இந்த அரிய பண்பை தேவகி அவர்கள் எமக்கு விட்டுச் சென்றுள்ளார்கள். இவரது கல்விச் சேவை சேவையிலுள்ள ஆசிரியர்களுக்கு உன்னதமான எண்ணங்களை அவர்கள் மனங்களிலே உதிப்படையச் செய்ய வேண்டும். திருமதி தேவகி புவனேஸ்வரன் அவர்களும் அவரது துணைவர், அன்பு மகள் யாவரும் புதுப் பொலிவுடன் நீண்ட நாட்கள் மிகுந்த மகிழ்வாக வாழ எனது நல்லாசிகளைச் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**த.குருகுலராசா,**
**முன்னைநாள் கல்வி அமைச்சர், வடக்கு மாகாண சபை,**
**ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர்.**

### மணிவிழா நாயகியே வாழ்க!



மணித்திரு நெல் வயல் சூழ் பெரும் நிலப்பரப்பாம் வன்னியில் வினைத்திறனான பணிபுரிந்து விளைவுகள் ஈட்டிய மணிவிழா நாயகி தேவகி ரீச்சரே வாழ்க.

தேவகி ரீச்சர் ஒரு ஆகாசன சக்தியைக் கொண்டவர். நாடிவரும் காரியங்களை செய்து வெற்றியுடன் மீளும் திறம் அவரிடம் உண்டு.

கடமை தவறாத தன்மை, காரியங்களில் மிகுந்த மென்மை, கைலாகு கொள்வதில் அதிமேன்மை.

இவர் தனக்குக் கீழே வேலை செய்பவர்களிடம் இருந்தும் தனது மேலதிகாரிகளிடம் இருந்தும் தன் சக அலுவலர்களிடம் இருந்தும் மிக இலகுவாக காரியங்களை சாதித்துக் கொள்ளும் சூட்சுமம் அறிந்தவர்.

அகவை அறுபதின் பின்பும் இவரது சேவை கல்வி உலகிற்குத் தேவை. ஆனால் ஓய்வு தவிர்க்கமுடியாததாகின்றது. திருமதி தேவகி புவனேஸ்வரன் தனது ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்தாருடன் இனிது வாழவும் எல்லா நலனும் பெற்று உய்யவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி அமைகின்றேன். வாழ்க பல்லாண்டு, வாழ்க வளமுடன்.

**செ.மோகநாதன், கோட்டக்கல்விப் பணிப்பாளர், உடுவில்.**

### ஆசிச்செய்தி



நேர்மை, ஆளுமை, அர்ப்பணிப்பு, மாணவர் கல்வி மேம்பாடு ஆகியவற்றை தன்னகத்தே கொண்டு 34 வருடங்கள் கல்விப் பணியாற்றி இன்று ஓய்வுபெறும் திருமதி தேவகி புவனேஸ்வரன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் சிறப்பு பட்டதாரியாக பட்டம்பெற்று கிளிநொச்சி கல்வி வலயத்தில் கிளி/ கனகாம்பிகைக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் முதல் நியமனம் பெற்று ஆசிரியராக, பிரதி அதிபராக, பதில் அதிபராக பல பதவிகள் வகித்து 04.08.2000 இல் இலங்கை அதிபர் சேவைக்கு உள்வாங்கப்பட்டு கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கனகபுரம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராகச் சேவை யாற்றி 2009 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்று வலிகாமம் கல்வி வலயத்தில் சுன்னாகம் றோமன் கத்தோலிக்க பாடசாலை, ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம் ஆகியவற்றில் தரம்-1 அதிபராக மிகுந்த அர்ப்பணிப்புடன் கல்விப் பணியாற்றியுள்ளார். ஏழாலை சைவ மகா வித்தியாலயத்தில் மதிப்புக்குரிய அதிபருடன் நான் பிரதி அதிபராகக் கடமை யாற்றியபோது அவரது ஆளுமை, நிர்வாகத் திறமை ஆகியவற்றின் மூலம் ஆசிரியர்கள், மாணவர்கள் சமூகம் ஆகியவற்றை ஒன்றிணைத்து கல்வி முன்னேற்றத்திற்கும் இணைபாட விதான செயற்பாடுகளுக்கும் அயராது பாடுபட்டதை அவதானிக்க முடிந்தது. அதிபரிடம் எப்போதும் கண்டிப்பும் இருக்கும்.

நீண்ட கல்விப் பணியாற்றி இன்று ஓய்வு பெறும் திருமதி தேவகி புவனேஸ்வரன் அவர்கள் ஓய்வுக்காலத்தில் கல்வித்துறைக்கும் சமூகத்திற்கும் வழிகாட்டியாக இருந்து சுகநலத்துடன் ஓய்வுக்காலத்தை கழிக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி ஆசி கூறுகின்றேன்.

**பிரம்மஸ்ரீ. ச.பிரணதார்த்திகரசர்மா,**
**ஓய்வு நிலை பிரதி அதிபர், யா/ ஏழாலை சைவமகாஜன வித்தியாலயம்.**

### பல்துறை தேர்ச்சியுடையாளே வாழிய வாழீ!



விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கிணங்க திருமதி தேவகி புவனேஸ்வரன் அவர்கள் இளமையிலேயே பல்துறைசார் அறிவுடன் கற்றுத் தேர்ந்தமையினால் 1989 ஆம் ஆண்டிலிருந்து கல்விப் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். 2000.08.04 ஆம் திகதி முதல் பெண் தலைமைத்துவம் கொண்ட அதிபராய் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் முதன்முதல் அதிபராய் நியமிக்கப்பட்டார். அன்று தொடங்கிய பயணம் யாழ். மண்ணிலும் இருவேறு பாடசாலைக்கு கைகூடியது. யா/ ஏழாலை சைவ ம்காஜன வித்தியாலயத்திலும் 18.10.2010 இல் கால்பதித்த பின்னரும் பல தொடர்ச்சியான வெற்றிகளை மாணவர்கள் மூலம் பாடசாலைக்கு ஈட்டித் தந்தார். ஒவ்வொரு பணியாளரின் குடும்பத்தில் தானும் ஓர் அங்கத்தவராய் வலம் வந்தார்.

மாணவர்களுடன் அன்பு கலந்த கண்டிப்பினை காட்டுவார். தனது பணி நெருக்கீடுகள் பல்வேறு விமர்சனங்கள் யாவற்றிற்கும் அப்பால் மிக மனிதநேயத்துடன் பணியாற்றிய எமது வித்தியாலயத்தின் முதல் பெண் அதிபராய் தேவகி புவனேஸ்வரன் அவர்களை என்றும் நாம் மறக்க முடியாது.

அவரது ஓய்வுக்காலம் மிகவும் திருப்தியுடனும் நோய் நொடிகள் இன்றி ஆரோக்கியமாய் அவர்தம் குடும்பத்துடன் நீடூழி வாழ என் குலதெய்வம் சின்னம்மனை வேண்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**திருமதி. பராசக்தி, பிரதி அதிபர், யா/ ஏழாலை சைவமகாஜன வித்தியாலயம்.**

(8558)

பாரதம் | வெளிநாடு

## பருவநிலை மாற்றம் தொடர்பாக
# அமெரிக்கா - சீனா இணைந்து செயற்படுவதாக அறிவிப்பு
## உலக நாடுகள் வரவேற்பு

(ஸ்கொட்லாந்து)

எதிர்வரும் பத்து ஆண்டுகளுக்கு பருவநிலை மாற்ற பிரச்சினை தொடர்பான தீர்வு நடவடிக்கைகளில், சீனாவும் அமெரிக்காவும் இணைந்து செயற்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

க்ளாஸ்கோவில் நடைபெற்று வரும் கோப்-26 பருவநிலை மாநாட்டில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

சமீபகாலமாக சீனா மற்றும் அமெரிக்கா இடையே பதற்ற நிலை நிலவி வருகின்ற நிலையில், இந்த அரிய உறுதிப்பாட்டு கூட்டு அறிவிப்பினை உலக நாடுகள் வரவேற்றுள்ளன.

இதில், பரிஸ் ஒப்பந்தத்தில் 1.5 செல்சியஸ் வெப்ப நிலை என்ற இலக்கை நோக்கி இருநாடும் இணைந்து செயற்படும் என்று வழங்கிய உறுதிப்பாட்டை மீண்டும் நினைவுகூர்வதாக தெரிவித்துள்ளன.

அதேபோன்று இந்த இலக்கை அடைய இருநாட்டிற்கு இடையே இருக்கும் இடைவெளியை குறைப்பதற்கான நடவடிக்கைகளில் இரு நாடும் ஈடுபடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## 100 ஆண்டுகளுக்கு முன்பு கடத்தப்பட்ட அன்னபூரணி சிலை மீட்பு



(டில்லி)

வாரணாசியில் இருந்து 100 ஆண்டுகளுக்கு முன்பு கடத்திச் செல்லப்பட்ட அன்னபூரணியின் சிலை கனடாவில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 17 அங்குலம் உயரமும் 9 அங்குலம் அகலமும் கொண்ட இந்த சிலை பிரதமர் மோடியிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலும் 157 சிலைகள், ஓவியங்கள் இந்தியாவிடமிருந்து கடத்தப்பட்டு வெளிநாடுகளில் உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. (நி-5)

# தாய்வான் அருகே சீனா போர்ப் பயிற்சி
## இரு நாடுகளுக்கிடையில் பதற்றம் அதிகரிப்பு



(பீஜிங்)

அமெரிக்க காங்கிரஸின் பிரதிநிதிகள் குழுவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், தாய்வான் அருகே சீன இராணுவப் படைகள் போர்ப்பயிற்சிகளை நடத்தி வருகின்றன.

தாய்வான் ஜலசந்தி பகுதியில் மேற்கொள்ளப்படும் பயிற்சிகள் தேசிய இறையாண்மையைப் பாதுகாப்பதற்கான அவசியமான நடவடிக்கை என்று சீனாவின் பாதுகாப்பு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

எனினும், பயிற்சிகளின் நேரம், பங்கேற்பாளர்கள் மற்றும் இடம் பற்றிய எந்த விபரங்களையும் அது வெளியிடவில்லை.

தங்களை மீறி தாய்வானுடன் பிற நாடுகள் தூதரக உறவு கொள்வதற்கு சீனா கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. எனினும், தாய்வானுடன் அதிகாரபூர்வமற்ற தூதரக மற்றும் இராணுவ நட்புறவை அமெரிக்கா பேணி வருகிறது.

சீனாவில் கடந்த 1949 இல் நடந்த உள்நாட்டுப்போருக்கு பிறகு தாய்வான் தனி நாடாக உருவானது. ஆனாலும் தாய்வான், சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என சீன அரசாங்கம் கூறி வருகிறது.

எனினும் தாய்வான், சீனாவின் கட்டுப்பாட்டில் இல்லை. ஜனநாயக முறையிலான அரசாங்கம் தான் அங்கு ஆட்சி அதிகாரத்தில் உள்ளது.

ஆனால், தேவை ஏற்பட்டால் சீனக் கடற்கரையில் இருந்து சுமார் 200 கி.மீ. தொலைவில் உள்ள தாய்வானை கைப்பற்ற படைபலத்தை பயன்படுத்தவும் தயங்க மாட்டோம் என சீனா மிரட்டியும் வருகிறது.

இந்த சூழலில் கடந்த 72 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சீனா- தாய்வான் இடையிலான இராணுவ பதற்றம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதனிடையே, எதிர்வரும் 2025 ஆம் ஆண்டுக்குள் தங்கள் நாட்டை சீனா ஆக்கிரமிக்கக் கூடும் என்று தாய்வான் பாதுகாப்புத் துறை அமைச்சர் சியு குவோ-செங்கும் அச்சம் தெரிவித்துள்ளார். (நி-5)

# மிகக்குறைந்த எடையுடன் 21 வாரங்களில் பிறந்து
## கின்னஸில் இடம்பிடித்த குழந்தை



(வோஷிங்டன்)

அமெரிக்காவைச் சேர்ந்த கர்டிஸ் மீன்ஸ் என்ற குழந்தை 21 வாரங்கள் மற்றும் ஒரு நாளில் 420 கிராம் என்ற மிகக் குறைந்த எடையுடன் பிறந்து, உயிர் பிழைத்த குழந்தையாக கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

கர்டிஸ் மீன்ஸ் கடந்த ஆண்டு அலபாமாவின் பர்மிங்காமில் வெறும் 420 கிராம் (14.8 அவுன்ஸ்) எடையுடன் பிறந்தான். தற்போது 16 மாதமாகும் கர்டிஸ் மீன்ஸ் உலக சாதனைக் குழந்தையாக உறுதிப்படுத்தப்பட்டு கின்னஸ் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

பொதுவாக முழுமையான கர்ப்பகாலம் என்பது 40 வாரங்கள் ஆகும். கர்டிஸ் மீன்ஸ் பொதுவான கர்ப்பகாலத்துக்கு 19 வாரங்கள் முன்கூட்டியே பிறந்தான்.

உயிர் பிழைப்பதற்கான ஒரு சதவீதத்திற்கும் குறைவான வாய்ப்பு இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்த நிலையில் கர்டிஸ் தீவிர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டிருந்தான்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து வெளியே வந்தாலும் 275 நாட்கள் மருத்துவமனையில் இருந்து இவ்வாண்டு ஏப்ரல் மாதமே குழந்தையும் தாயும் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை, 16 மாதங்கள் ஆனபோதும் இன்று வரை இக்குழந்தைக்கு ஒட்சிசன் மற்றும் உணவுக் குழாய் தேவைப்படுகிறது. எனினும் குழந்தை நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதுவரை உலகில் மிகக் குறைந்த வாரங்களில் பிறந்த குழந்தையாக கனடாவின் ஒட்டாவாவில் பிறந்த ஆண் குழந்தை உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றிருந்தது. 21 வாரங்கள் மற்றும் ஐந்து நாட்களில் இந்தக் குழந்தை பிறந்தது. தற்போது 34 ஆண்டுகளின் பின் இந்தச் சாதனையை கர்டிஸ் மீன்ஸ் முறியடித்துள்ளான். (நி-5)

# 116 வருடங்களின் பின்
## சீனாவில் பாரிய பனிப்பொழிவு



(பீஜிங்)

வடகிழக்கு சீனாவில் 116 வருடங்களின் பின்னர் பாரிய பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

லியோனிங் மாகாண தலைநகர் சென்யாங்கில் 51 சென்ரிமீற்றர் உயரத்திற்கு பனி படர்ந்துள்ளது.

1905 இன் பின்னர் பதிவாகியுள்ள அதிகூடிய பனிப்பொழிவு இதுவென சீன ஊடகமான சின் சுவா செய்தி வெளியிட்டது.

அங்கு வாகன மற்றும் ரயில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குளிர் அலை ஆரம்பித்ததில் இருந்து, வடகிழக்கு சீனாவில் வெப்பநிலை சில பகுதிகளில் 14 டிகிரி செல்சியஸ் வரை குறைவடைந்துள்ளது. பனிப்புயல் ஏற்படும் வாய்ப்புள்ளதால், வடகிழக்கு சீனாவின் சில பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-5)

# பொதுமக்களுக்கு தொற்று நோய்களில் இருந்து பாதுகாப்பது தொடர்பில் அறிவுறுத்து

## சுகாதாரத் தரப்பால் முன்னெடுப்பு

(அக்கராயன்)

தற்போது மழை சூழல் காணப்படும் நிலையில் அனைவரும் கொதித்தாறிய நீரினை அருந்துமாறு சுகாதாரப் தரப்பினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உணவுகளை ஆறவிடாமல் சமைத்த உடனேயே உணவருந்துமாறும் இறுக்கமான சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் தொற்று நோய்களில் இருந்து மக்கள் தங்களை தாங்களே தற்பாதுகாத்துக் கொள்ளலாம் எனவும் சுகாதாரத் தரப்பினரால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

காய்ச்சல் போன்ற நோய்கள் இருக்குமானால் வீட்டில் இருக்காது உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலைகளுக்குச் செல்லுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குளிரான காலநிலை காணப்படுவதன் காரணமாக சிறுவர்களை வெளியில் தேவையில்லாமல் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்வதற்கு பெற்றோர்கள் விழிப்புணர்வுடன் செயற்படுமாறும் சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர். (4-5-350)



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட கூழாமுறிப்பு அ.த.க.பாடசாலை, கரிப்பட்ட முறிப்பு அ.த.க. பாடசாலை, மாமடு பழம்பாசி அ.த.க. பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளுக்கு நஷனல் பி வி சி நிறுவனத்தின் உதவியுடன் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட குடிநீர்த்திட்டங்கள் மாணவர்களின் பாவனைக்காக நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன. (படம்-தவசீலன்)

# ஐயன்கன்குளம் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வசதி இல்லை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஐயன்கன்குளம் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வசதி இன்மையால் நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் கந்தசாமி சகுந்தலாதேவி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த 2019 ஆம் ஆண்டு ஐயன்கன்குளம் வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வண்டி திருத்த வேலைகளுக்காக கொண்டு செல்லப்பட்டது.

அவ்வண்டி திருத்தம் செய்யப்பட்டு வராத காரணத்தினால் வைத்தியசாலையினை நம்பி இரவு வேளைகளில் வருபவர்கள் 15 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மல்லாவி ஆதார வைத்தியசாலைக்குச் செல்வதில் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

ஐயன்கன்குளம் கிராமத்தினைச்சேர்ந்த 210 குடும்பங்களும் பழையமுறிகண்டி கிராமத்தினைச் சேர்ந்த 40 குடும்பங்களும் புத்துவெட்டுவான் கிராமத்தினைச் சேர்ந்த 85 குடும்பங்களும் ஐயன்கன்குளம் வைத்தியசாலையை நம்பி வாழ்கின்ற நிலையில் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வண்டி இல்லாதது நோயாளர்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

வைத்தியசாலைக்குரிய அம்புலன்ஸினை மீண்டும் வைத்தியசாலைக்கு அனுப்பி வைப்பதற்கு முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-5-350)


# மல்வத்து ஓயா நீர்வரத்து அதிகரிப்பு

## அவதானமாக செயற்படுமாறு மக்களுக்கு எச்சரிக்கை

(மன்னார்)

தொடர்ச்சியாக நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக மல்வத்து ஓயா நீர்வரத்து அதிகரித்துள்ளதுடன் மன்னார் தேக்கம் மற்றும் குஞ்சுக்குளம் பகுதிக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது.

எனவே தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மற்றும் குஞ்சுக்குளம், தேக்கம் பகுதிகளை அண்மித்து வசிப்போரை அவதானமாக செயற்படுமாறு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஸ்ரான்லி டி மேல் கோரிக்கை விடுத்துள்ளார். தொடரும் மழை காரணமாக மல்வத்து ஓயாவின் நீர் மட்டத்தின் அளவு நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்து வருகின்றமை தொடர்பாக மத்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர் நடராஜா யோகராஜா, மத்திய நீர்ப்பாசன பொறியியலாளர், மன்னார் அரசாங்க அதிபர் நந்தினி ஸ்ரான்லி டி மேல், மடு பிரதேச செயலாளர் அடங்கிய உயர் மட்டக் குழுவினர் தேக்கம் மற்றும் குஞ்சுக்குளம் நீர் வரத்து பிரதான ஆற்றுப்பகுதிக்கு நேற்று முன்தினம் நேரடி விஜயம் மேற்கொண்டதுடன் நீர்மட்டம் தொடர்பான விடயங்கள் மற்றும் பாதுகாப்புக் குறித்தும் கவனம் செலுத்தி வருகின்றனர்.



மேலும் அவசர நிலைமை ஏற்படும் பட்சத்தில் மக்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணித்துள்ளனர். (5-4-285)

# பொருட்களின் விலையேற்றத்திற்கு எதிராக புதுக்குடியிருப்பில் கவனயீர்ப்பு பேரணி





(பனிக்கன்குளம்)

நாட்டில் அதிகரித்துள்ள விலையேற்றத்தை கண்டித்து புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்களும் அரசியல் வாதிகள், பொதுமக்கள் இணைந்து கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நேற்றுக்காலை புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் இருந்து குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

பல்வேறு பதாகைகளை தாங்கியவாறும் மாட்டு வண்டிலில் அதிகரித்த விலைக்குரிய பொருட்கள் சிலவற்றை ஏற்றியவாறும் குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டக்காரர்கள் பேரணியாகச் சென்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளரிடம் விடயம் தொடர்பில் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (4-5-281)

# உத்தியோகத்தருக்கு தொற்று; திணைக்களம் பூட்டு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள அலுவலகத்தின் உறுப்பினருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதால் மறு அறிவித்தல் வரை அலுவலக நடவடிக்கைகள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் அறிவித்துள்ளார். மேலும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள அலுவலக நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கும் திகதி பின்னர் அறியத் தரப்படும் எனவும் தெரிவித்தார். (4-5-281-315)

# மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 127 குடும்பங்கள் இடைத்தங்கல் முகாம்களில்



(மன்னார்)

மன்னார் நகர்ப் பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளப் பாதிப்பு காரணமாக பாதிக்கப்பட்ட 127 குடும்பங்களை சேர்ந்த 444 பேர் தற்காலிக இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் நகர்ப்பிரதேச செயலாளர் ம.பிரதீப் தெரிவித்தார்.

மன்னார் பிரதேச செயலக பிரிவில் வெள்ளப்பாதிப்பு அதிகமாக உள்ள ஜீவபுரம், ஜிம் ரோன் நகர், செல்வபுரம், தலைமன்னார், பேசாலை உட்பட அதிக வெள்ளப்பாதிப்புக்கள் காணப்படும கிராமங்களில தற்காலிக முகாம் அமைக்கப்பட்டு பிரதேச செயலகங்கள் ஊடாக அவர்களுக்கான உணவு மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

அதேநேரம் வெள்ளப்பாதிப்பு மற்றும் காலநிலை மழை வீழ்ச்சி என்பவற்றைக் கருத்தில் கொண்டு தொடர்ச்சியாக தற்காலிக இடைக்தங்கல் முகாம்களில் செயற்பாடுகளை நீட்டிப்பது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (4-5-285)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 14.11.2021-12.11.2022



**கேட்ட உதவிகளைக் கேட்ட உடன் செய்து கொடுக்கும் சிம்ம இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 7 ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கின்றார். 7 ஆம் இடம் என்பது களத்திர ஸ்தானமாகும். அங்கு அமர்ந்திருக்கும் குருவின் பார்வை உங்கள் இராசியில் முழுமையாகப் பதிகின்றது. 'குரு பார்க்க கோடி நன்மை' என்பதற்கேற்ப இதுவரை ஏற்பட்ட இழப்புகளை எல்லாம் ஈடுசெய்து கொடுக்கப் போகின்றார். பொருளாதாரத்தில் நிறைவு, புகழ், கீர்த்தி, செல்வாக்கு, அருளாளர்களின் ஆதரவு, அரசியல் வாதிகளின் நட்பு, சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும் சூழ்நிலை போன்ற நல்ல வாய்ப்புகள் வரப்போவதை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். கடன் சுமை முழுமையாக குறைந்து கவலைகள் தீரும். பூமி விற்பனையால் இலாபம் கிடைக்கும். மேலும் அபரிமிதமான வளர்ச்சி காண சுய ஜாதகத்தில் திசாபுத்திக் கேற்ற தெய்வ வழிபாடுகளை மேற் கொள்ளுங்கள். குருவிற்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

## ஏழில் வந்தது குரு பகவான் இனி எல்லா நாட்களும் நலமாகும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவான் உங்கள் இராசியைப் பார்ப்பதோடு, 3, 11 ஆகிய இடங்களையும் முறையாகப் பார்க்கின்றார். எனவே ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். உற்சாகத்துடன் பணிபுரிந்து உன்னத வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள்.

குருவின் பார்வை 3 ஆம் இடத்தில் பதிவதால் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்க வாய்ப்புகள் கைகூடிவரும். வெற்றிகள் ஸ்தானம் புனிதமடைவதால் வெற்றிக் கனியை விரைவில் எட்டிப் பிடிப்பீர்கள். தொழில் சூடு பிடிக்கும். கூட்டுத்தொழில் தனித்தொழிலாக மாறவும் வாய்ப்புகள் கைகூடி வரும். அரைகுறையாக நின்ற வேலைகள் இப்பொழுது துரிதமாக நடைபெறும்.

குருவின் பார்வை 11 ஆம் இடத்தில் பதிவதால் இலாப ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே தொழிலில் எதிர்பாராத விதத்தில் பலமடங்கு இலாபம் கிடைக்கும். போட்டிக்கடை வைத்தோர் விலகுவர். புதிய கூட்டாளிகள் வந்திணைந்து வளர்ச்சிக்கு வழிகாட்டுவர். உயர்பதவி வகிப்பவர்களுக்கு வெளிநாட்டில் இருக்கும் நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். வாடகைக் கட்டடத்தில் நடைபெறும் தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் அமைப்பு உண்டு.

**நட்சத்திர பாதசாரப்படி பலன்கள்**

**செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (13.11.2021 முதல் 12.12.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். யோக காரகனான செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சரிப்பது அற்புதமான நேரமாகும். தொட்டது துலங்கும், நினைத்தது நடக்கும். தொழில் வளம் சிறக்கும். தொல்லைகள் அகலும். கடன் சுமை குறையும். கவலைகள் தீரும். தெளிந்த மன நிலையோடு செயற்படுவீர்கள்.

**இராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (13.12.2021 முதல் 1.3.2022 வரை)**

உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் இப்பொழுது இராகு சஞ்சரிக்கின்றார். அவர் சஞ்சரிக்கும் வீட்டிற்கு அதிபதி சுக்கிரன் ஆவார். குறிப்பாக தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். பழைய கடன் பாக்கிகள் இப்பொழுது வசூலாகும்.




**சுய சாரத்தில் குரு சஞ்சாரம் (2.3.2022 முதல் 13.4.2022 வரை)**

உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியானவர் குரு. பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு அதிபதியாகவும், இழப்புகள் ஸ்தானத்திற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் வரவைக் காட்டிலும் செலவு கூடும். திட்டமிட்ட காரியங்கள் சில நடைபெறாமலும் போகலாம். எதிரிகளை அரவணைத்துக் கொள்வது நல்லது. இதுபோன்ற நேரங்களில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

**இராகு-கேது பெயர்ச்சிக் காலம்**

குருப்பெயர்ச்சிக் காலத்தில் 21.3. 2022 இல் இராகு-கேது பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. இதுவரை உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த இராகு பகவான் 9 ஆம் இடம் எனப்படும் பாக்கிய ஸ்தானத்திற்கு செல்கின்றார். இதுவரை சுக ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த கேது பகவான் இனிமேல் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார்.

எனவே தந்தை வழி உறவில் இருந்த விரிசல்கள் அகலும். பிள்ளைகளின் பட்டப்படிப்பு சம்பந்தமாக நீங்கள் செய்யும் முயற்சி கைகூடும்.

**சிறப்பு வழிபாடு**

இல்லத்து பூஜை அறையில் குரு தட்சிணாமூர்த்தி படம் வைத்து குரு கவசம் பாடி வழிபடுவதோடு, வாய்ப்பிருக்கும் பொழுது கோவிலுக்கு சென்று வழிபட்டு வருவது நல்லது.

**செவ்வாய் - சனி பார்வை மற்றும் சேர்க்கை**

13.11.2021 முதல் 6.12.2021 வரை செவ்வாய்-சனி பார்வைக் காலம்,

26.2.2022 முதல் 6.4.2022 வரை மகரத்தில் செவ்வாய்-சனி சேர்க்கைக் காலம்,

இக்காலத்தில் கூடுதல் கவனத்தோடு செயற்பட வேண்டும். ஆரோக்கியத் தொல்லைகளும், மருத்துவச் செலவுகளும் உண்டு. பணிபுரியும் இடத்தில் பிரச்சினைகள் அதிகரிக்கும். இக்காலத்தில் யாரையும் நம்பிச் செயற்பட முடியாது. நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்ய முடியவில்லையே' என்று கவலைப்படுவீர்கள்.

பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு வீண் பழி வந்து சேரும். ஒரு பக்கம் வருமானம் வந்தாலும் மற்றொரு பக்கம் இரு மடங்கு செலவாகும். குடும்ப ஒற்றுமை குறையலாம். எனவே இக்காலத்தில் எதையும் சிந்தித்துச் செய்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

சிம்ம இராசியில் பிறந்த பெண்களுக்கு குருவின் பார்வை இருப்பதால் முன்னேற்றத்தில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும். உடல் நலம் சீராகும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். இல்லறம் இனிக்கும்.

கல்யாண முயற்சி கள் கைகூடும். பணிபுரியும் பெண்க ளுக்கு கேட்ட சலுகைகளும் கிடைக் கும். பதவி உயர்வும் வந்து சேரும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்ப டும். குரு பகவான் வழிபாடு குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

(தொடரும்)

# மன ரீதியாக பாதிக்கப்படும் சிறுவர்கள் அதிகரிப்பு

## மருத்துவர்கள் கவலை

**(கொழும்பு)**

**சிறுவர்கள் வீடுகளுக்கு உள்ளேயே முடக்கப்பட்ட காரணத்தினால் மனநோய் நிலைமைகளுக்கு உள்ளாகும் நிலை அதிகரித்துள்ளதாக ரிஜ்வே மருத்துவமனையின் மருத்துவர்கள் தெரிவித்தனர்.**

இதன் காரணமாக வீடுகளில் சிறுவர்களுக்கு உகந்த சூழல் ஒன்றை ஏற்படுத்த பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பல்வேறு மனநிலைகளில் இருந்து சிறுவர்களைப் பாதுகாக்க அவர்களை பாடசாலைகளுக்கு அனுப்புவது அத்தியாவசியமானது எனவும் அவர்கள் தெரிவித்தனர். (நி-5)

# அதிருப்தியில் மக்கள் ஆட்சி மாற்றம் நிச்சயம்

## திஸ்ஸ ஆரூடம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் மக்களிடையே பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. எனவே மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறாவிடின் மக்கள் பிறிதொரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவர் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஆளும் கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கும் பங்காளிக்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் பல்வேறுபட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன. அந்த முரண்பாடுகளுக்கு தீர்வு பெற்றுக்கொள்ள ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் அண்மையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள் சிறந்த தீர்மானத்தை எடுக்கும் வகையில் அமையவில்லை.

கூட்டணிக்குள் காணப்படும் பிரச்சினைகளுக்கு வரவு- செலவுத் திட்டத்தை முன்னிலைப் படுத்தி தீர்வு காண பங்காளிக் கட்சியின் ஒருசில தரப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

நடப்பு அரசியல் முறைமை தொடர்பில் பொதுஜன பெரமுனவின் ஒரு சில உறுப்பினர்களின் கருத்துக்கள் வெறுக்கத்தக்கதாக உள்ளன. பல எதிர்பார்ப்புகளுக்கு மத் தியில் மக்கள் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ தலை மையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.




எனவே அந்த எதிர்பார்ப்பு நிறைவேறாவிடின் ஆட்சி மாற்றத்தை அவர்கள் ஏற்படுத்துவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# பேருந்து-கனரக வாகனம் கினிகத்தேனையில் மோதல்

## ஒருவர் பலி, இருவர் காயம்

(ஹற்றன்)

கினிகத்தேனை கண்டி பிரதான வீதியில் நேற்று வியாழக்கிழமை இ.போ.சக்கு சொந்தமான பழுது பார்க்கும் பேருந்து ஒன்றும் கனரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# சீமெந்து தட்டுப்பாடு விரைவில் நிவர்த்தியாகும்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீமெந்து தட்டுப்பாட்டை எதிர்வரும் டிசெம்பர் மாத நடுப்பகுதிக்குள் நிவர்த்தி செய்ய முடியும் என சீமெந்து இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர். எதிர்வரும் வாரங்களில் சீமெந்து அடங்கிய கப்பல்கள் நாட்டை வந்தடைய வுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## தேவையில்லாத வேலை

சிலர் தங்களிடம் இல்லாத திறமைகளை இருப்பதாகக் காட்டிக்கொள்வதில் பெரிதும் ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர். சிறு வயதில் ஏற்படும் இப்பழக்கம் மெல்லத் தொடர்கிறது.

சிலரிடம் அட்டை போல் ஒட்டிக் கொள்கிறது. இச்செயல் அந்தக் குறிப்பிட்ட நபருக்குப் பெரும்பாலும் நற்பெயரைப் பெற்றுத் தருவதே இல்லை.

இது ஒரு தீய பழக்கம். நம் இயல்புக்கு மீறிய செயல்களைச் செய்ய முயல்வது நல்லதல்ல. இத்தகைய முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு எதிரே பெண்கள் இருந்துவிட்டால் போதும், என்னவோ சங்ககாலத்து வீர மறவர்களைப் போல ஆகிவிடுவார்கள்.

நான்கு பேர் சேர்ந்து தூக்கக்கூடிய பெட்டியைத் தாம் ஒருவரே தூக்கிக்காட்ட வேண்டும் என்று தூக்குவார்கள். தோள்மூட்டுப் பிடித்துக் கொள்ளும். ஐயோ! அம்மா, அப்பா! என்ற முனகலோடு பார்வையாளர்களின் சிரிப்பும் கேலியும் தான் மிஞ்சும்.

நான் பச்சையப்பன் கல்லூரியில் பி.யு.சி. சேர்ந்திருந்த சமயம், என் வகுப்பு நண்பரும் நானும் ஒன்றாக மாம்பலத்திலிருந்து நுங்கம்பாக்கம் வரை மின்சார ரயிலில் வருவோம். பிறகு அங்கிருந்து சிறிது தூரம் ரயில் பாதையில் நடந்தால் பச்சையப்பன் கல்லூரியின் பின்புறம் வந்துவிடும்.

நண்பர் புகையிரதம் புறப்பட்ட பிறகும் கூட ஏற மாட்டார். ரயில் பின்முனை பிளாட்பாரத்தைக் கடக்கும் சமயம் தான் ஏறுவார். அலுவலகம் செல்பவர்களிடையே அவரது இந்த ஸ்டண்ட் மிகப் பிரபலம்!

ஒரு நாள் ரயிலிலிருந்து விழுந்து சரியான அடி. முதுகில் நடுத்தண்டு முறிந்து விட்டது. மூன்று மாதம் கல்லூரிக்கே செல்ல முடியவில்லை. அவரை ஆஸ்பத்திரியில் காண நேர்ந்த போது, பெரிய தவறு செய்துவிட்டேன் என்றார்.

வேகமாக ஓடும் ரயிலில் தாவி ஏறுவது என்பது அனைவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டிய ஓர் அவசியமான கலைதான். ஆனால், அதை தேவையில்லாத நேரங்களில் பயன்படுத்தினேன். இப்போது அதை எண்ணி எண்ணி வருந்துகிறேன் என்றார்.


நான்கு பேர் பந்தயம் கட்டுகிறார்கள் என்பதற்காக நம் உயிரைப் பணயம் வைப்பது எந்த அளவுக்குப் புத்திசாலித்தனம் என்று எனக்குப் புரியவில்லை.

ஆற்றலுள்ளவர்கள் அமைதியுடன் இருக்கிறார்கள். பண்புடன் நடந்து கொள்கிறார்கள். ஆனால், தங்கள் ஆற்றல் மீது தங்களுக்கே அரைகுறையான நம்பிக்கை உள்ளவர்கள் தான் தேவையில்லாத காரியங்களில் தலையிடுகிறார்கள். தாழ்வு மனப்பான்மை உடைய இவர்கள், இம்மாதிரியான செயல்களில் ஈடுபட்டு மூக்குடைபட்டு மேலும் அவமானத்திற்கும் உள்ளாகிறார்கள்.

வாகனங்களில் செல்கிற சிலர், பெண்களைக் கண்டவுடன் கன்னா பின்னாவென்று ஓட்டுகிறார்கள். உண்மையில் இத்தகைய செயல்களைப் பெண்கள் அறவே வெறுக்கிறார்கள்.

நாம் இயல்பாக இருப்போம். நாம் நலமாக இருப்போம். நம் பெருமை தானாக வெளிப்படும்.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

“வைக்கோல் குடிசையை வைத்து என்னிடம் தப்பிக்கப் பார்த்தாயா?” இப்போது நீ என் வயிற்றுக்குள்“ என்று மகிழ்ச்சியாகப் பாடிக் கொண்டே அங்கிருந்து சென்றது ஓநாய்.

அதன் கண்ணில் கீற்றுக் குடிசை பட்டது. அதற்குள்ளும் பன்றிக் குட்டி இருப்பதைப் பார்த்தது. அந்தக் குடிசையின் கதவைத் தட்டியது அது.

“பன்றிக் குட்டியே! கதவைத் திற” என்று அதட்டியது. “நான் கதவைத் திறக்க மாட்டேன்! வேறு எங்காவது போ” என்றது பன்றிக்குட்டி.

“உனக்கு அவ்வளவு திமிரா? உன்னை என்ன செய்கிறேன் பார். இந்தக் கீற்றுக் குடிசை என் வலிமையைத் தாங்குமா?” என்று உறுமியது.


வேகமாகத் தன் மூச்சை இழுத்துக் குடிசையை நோக்கி ஊதியது. கீற்றுகள் பறந்து சென்றன. அந்தப் பன்றிக் குட்டியையும் விழுங்கியது.

இரண்டு பன்றிக் குட்டிகளையும் உண்ட அதனால் நடக்க முடியவில்லை. தள்ளாடியபடியே நடந்தது.

செங்கலால் கட்டப்பட்ட வீடும் அதன் கண்ணில் பட்டது. அருகே சென்ற அது ஜன்னல் வழியாக உள்ளே பார்த்து, ”ஆ! இங்கும் கொழுத்த பன்றிக்குட்டி ஒன்று உள்ளது”என்று துள்ளிக் குதித்தது.

கதவைத்தட்டிய அது, “பன்றிக் குட்டியே! கதவைத் திற... நான்

## செங்கல் வீடு



உள்ளே வர வேண்டும்” என்று அதட்டியது.

“நான் கதவைக் திறக்க மாட்டேன்!” என்றது அந்த பன்றிக்குட்டி. “கதவைத் திறக்க மாட்டாயா? இப்படித்தான் உன் அண்ணன்களும் சொன்னார்கள். என் வாயினால் ஊதி அவர்கள் குடிசைகளைப் பறக்கச் செய்தேன். அவர்கள் இப்போது என் வயிற்றுக்குள். மரியாதையாகக் கதவைத் திற” என்று மிரட்டியது அது.

“உன்னால் முடிந்ததைச் செய்துகொள். நான் கதவைத் திறக்க மாட்டேன்” என்றது பன்றிக்குட்டி.

கோபம் கொண்ட ஓநாய் தன் வலிமை கொண்டு ஊதியது. ஆனால், அந்த வீடு சிறிதும் அசையவில்லை. மீண்டும் மீண்டும் மூச்சு வாங்கி வேகமாக ஊதியது. அப்போதும் அசையவில்லை.

ஊதி ஊதிக் களைப்பு அடைந்தது ஓநாய். வலிமை வாய்ந்த அந்த வீட்டை ஒன்றும் செய்ய முடியாது. முயற்சி செய்வதால் பயன் இல்லை என்பது அதற்குப் புரிந்தது. பன்றிக்குட்டியை ஏமாற்ற சூழ்ச்சி ஒன்று அதற்குத் தோன்றியது.


இனிமையான குரலில் அது, “நண்பா! நீ பசியால் வாடுகிறாய். சுவையான முள்ளங்கி ஏராளமாக விளைந்து உள்ளது. என்னுடன் வந்தால் இருவரும் மகிழ்ச்சியாக உண்ணலாம்” என்றது.

(தொடரும்)

# மகாபாரதம்

### நன்மை யாருக்குச் செய்ய வேண்டும்

241



நன்மை செய்யும் போதும் பண்பு அறிந்து செய்ய வேண்டும் என்பதை விளக்கும் கதை.

மனித நடமாட்டம் அற்ற காட்டில் ஒரு முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். கிழங்கு வகைகளையும், காய்களையும், கனியையுமே உண்டு முனிவருக்குரிய நியமங்களுடன் திகழ்ந்தார்.

கொடிய விலங்குகள் கூட அவர் தவ வலிமை அறிந்து அவருக்கு அருகில் அமைதியாகவே இருந்து விட்டுச் செல்லும். சிங்கம், புலி, கரடி போன்றவை கூட அவர் தவத்தை வியந்து அன்புடன் நடந்து கொள்ளும்.

இந்நிலையில் ஒரு நாய் மட்டும் அவரைப் பிரிய மனமின்றி அவருடனே இருந்தது முனிவரிடம் பக்தியு டன் நடந்து கொண்டது.

‘அவருக்கு எது உணவோ அதுவே நாய்க்கும் உணவு. முனிவரிடம் அந்த நாய் சிநேக பாவத்துடன் நடந்துக் கொண்டது.

அப்போது பசியும், தாகமும் ரத்த வெறியும் பிடித்த ஒரு சிறுத்தைப் புலி அந்த நாயை நோக்கிப் பாய்ந்து வந்தது. அது கண்டு அஞ்சிய நாய் முனிவரைத் தஞ்சம் அடைந்தது. “மாமுனியே! தாங்கள் தான் என்னை இந்தப் புலியிடமிருந்து காப்பாற்ற வேண்டும்” என வேண்டிக் கொண்டது.

முனிவர் அந்த நாயைப் பார்த்து, “அஞ்சாதே! நீ இந்தப் புலியிடமிருந்து தப்பிப் பிழைக்க ஒரு வழி சொல்கிறேன்.

சற்று நேரத்தில் நீ ஒரு சிறுத்தைப் புலியாக மாறுவாய்” என்று கூறினார். உடன் நாய் புலியாக மாறியது. சீறி வந்த சிறுத்தைப் புலி இது கண்டு விலகிச் சென்றது.

சிறிது நேரம் கழித்து பெரும் புலி ஒன்று இந்தச் சிறுத்தைப் புலியைக் கண்டு கொல்ல வந்தது. பெரும் புலியைக் கண்ட அஞ்சிய சிறுத்தை முனிவரிடம் சென்று முறையிட்டது.

உடன் முனிவர் அச்சிறுத்தைப் புலியை பெரும் புலியாக ஆக்கி அதன் அச்சத்தைப் போக்கினார். நாயாக இருந்து, சிறுத்தைப் புலியாகி பின் பெரும் புலியாக மாறியதும் அந்நாய் மாமிசத்தை உணவாக உட்கொண்டது.

காய்கனிகளை அறவே விலக்கியது. அசல் கொடிய விலங் காய் மாறியது. உணவுக்காக வெளியில் சென்று விலங்குகளைக் கொன்று தின்று பசியாறிய பிறகு முனிவரின் ஆசிரமத்திற்குத் திரும்பி வந்து தூங்கிக் கொண்டிருந்தது.

அப்போது ஒரு யானை ஆசிரமத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. அது கண்டு புலி மீண்டும் முனிவரிடம் முறையிட்டது.

கருணை கொண்ட அவரும் அதனை வலிமை மிக்க யானையாக்கினார். வந்த யானை இதைக் கண்டு திரும்பியது. ஆனால் யானையான நாயோ அஞ்சாமல் காடு முழுதும் உல்லாசமாக திரிந்து வந்தது. அப்படியிருக்கையில் ஒரு நாள் சிங்கம் ஒன்று மலைக் குகையில் இருந்து காடு நடுங்குமாறு கர்ஜனையுடன் வெளிப் பட்டது. சிங்கத்தைக் கண்ட யானை முனிவரை நாடியது.

(தொடரும்)

நாம் முன்னேறும் பாதையில் செல்வதே நம்மவர்களையும் முன்னேறச் செய்ய சிறந்த வழி.
– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நடிப்புச் சுதேசிகளை நம்பிக்கெட்ட தமிழினம்

ஈழத் தமிழ் மக்களுக்கு இன்னமும் சரியானதொரு அரசியல் தலைமை வாய்க்கவில்லை என்பதைப் பகிரங்கமாகக் கூறியாக வேண்டும்.

இங்கு சரியான அரசியல் தலைமை என்றால் என்ன? என்றொரு கேள்வி உங்களிடம் எழலாம்.

அவ்வாறானதொரு கேள்வி எழுகை பெறும்போது, அதற்கான பதிலை அளிப்பதும் கட்டாயமானதே.

அந்தவகையில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தொடர்பில் இன்னமும் ஐயம் இருக்கிறது.

ஆளுந்தரப்புக்காக இவர்கள் செயற்படுகின்றார்களா? என்ற சந்தேகம் தமிழ் மக்களிடம் இருக்கிறதென்பதை எவரும் நிராகரிக்க முடியாது.

இவ்வாறு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகளில் சந்தேகம் இருக்கும்போது, அவர்கள் ஒரு நல்ல அரசியல் தலைவர்கள் என்ற வகுதிக்குள் அடங்க மாட்டார்கள் என்பது ஏற்புடையதே.

தவிர, தமிழ் இனம் தொடர்பிலான இவர்களின் பற்றுதல் குறித்தும் ஐயம் உள்ளது.

உண்மையான தமிழ் விசுவாசி என்றால், உண்மையான தமிழ்ப் பற்றாளர் என்றால், அவரின் செயல் எங்கும் உண்மையானதாக – விசுவாசமானதாக – நேர்மையானதாக – வெளிப்படையானதாக இருக்கும்.

ஆனால் எங்கள் அரசியல் தலைவர்களிடம் மனம், வாக்கு, காயத்துடன் கூடிய திரிகரண சுத்தி இல்லை என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

பாராளுமன்றப் பதவி இல்லையென்றால், பாராளுமன்றப் பதவி பெற்றவர்களைக் கண்டபாட்டில் விமர்சிப்பார்கள்.

மாறாக, பாராளுமன்றப் பதவி கிடைத்துவிட்டால் தங்களை மாற்றிக்கொண்டு அதற்கொரு வியாக்கியானம் செய்யத் தலைப்படுவர்.

இங்குதான் பதவி ஆசை மேலாடுவதைக் கண்டுகொள்ள முடியும்.

இந்த நிலைப்பாட்டில் இருந்து தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாரையேனும் விலக்கிப் பார்க்க முடியுமா? என்றால் இல்லை என்பதுதான் பதிலாக இருக்கும்.

என்ன செய்வது அப்பாவித் தமிழ் மக்கள் அதிலும் குறிப்பாக தமிழ் இளைஞர்கள் சுயநலம் எதுவுமின்றி தமிழினம் வாழ வேண்டும் என்ற ஒரே நோக்குக்காக தங்களை அர்ப்பணித்து இரவு பகலாக அரசியல் பலத்துக்காகப் பாடுபட்டனர்.

ஆனால் ஏற்பட்ட மாற்றம் தொடர்பில் இருக்கக்கூடிய உண்மைத் தகவல்களை அறிந்தால் தலைசுற்றும்.

ஆகையால் நம்பி இருக்கக்கூடியவர்களின் அந்த நம்பிக்கையாவது அப்புலுக்கற்றதாக இருக்கட்டும் என்பதால் சுயநலத்தின் விசுவரூபங்கள் சூக்குமமாகவே இருக்கட்டும்.

# கல்வி முறையை ஒன்லைன் யுகத்திற்கு ஏற்ற வகையில் மறுசீரமைக்க வேண்டும்

## ஐ.தே.க தலைவர் ரணில்

(கொழும்பு)

இலங்கையின் கல்வி முறையை ஒன்லைன் யுகத்திற்கு பொருத்தமான வகையில் மறுசீரமைப்பு செய்வது அவசியமென்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சூம் தொழில்நுட்பம் மூலமான விவாதமொன்றில் அவர் கலந்துகொண்டபோது நாட்டின் கல்வித்துறை தொடர்பில் அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தாம் கல்வி அமைச்சுக்குப் பொறுப்பாக இருந்த காலத்தில் சிறந்த கல்வி முறைமைக்கான அடிப்படையை உருவாக்கியதாகவும் எனினும் தற்போது மீண்டும் கல்வி முறைமையில் திருத்தம் மேற்கொள்ள வேண்டிய தேவை எற்பட்டுள்ளதாகவும்அவர் தெரிவித்துள்ளார்.(ம-3)

## ஓமந்தையில் கிராம அலுவலருக்கு கொரோனா தொற்று

(வவுனியா)

வவுனியா, ஓமந்தைப்பகுதி கிராம அலுவலர் ஒருவருக்கு மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜன் பரிசோதனையில் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவருடன் தொடர்புடையவர்களையும் தனிமைப் படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-3)

## இந்திய மீனவர்களுக்கான விளக்கமறியல் நீடிப்பு

(கரணவாய்)

அண்மையில் கைது செய்யப்பட்ட எல்லை தாண்டிய இந்திய மீனவர்களுக்கு இன்று வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் சூம் ஊடாக இடம்பெற்ற விசாரணைகளை அடுத்தே பருத்தித்துறை நீதிமன்றம் இவ் உத்தரவை வழங்கியுள்ளது.

மீனவர்கள் 23 பேர் சார்பிலும் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் சட்டத்தரணி லோ.குகதாஸ் ஆஜராகியிருந்தார்.

கைது செய்யப்பட்ட 23 மீனவர்களுக்கெதிராகவும் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்டமை, தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தியமை, அனுமதிப் பத்திரமின்றி மீன்பிடியில் ஈடுபட்டமை போன்ற மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் வழக்கை விசாரித்த நீதிபதி இன்றுவரை வழக்கை ஒத்திவைத்ததுடன் இன்று குறித்த 23 மீனவர்களையும் மன்றில் ஆயர்ப்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

இம் மீனவர்களின் வழக்கு விசாரணைகளுக்கு யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளும் சமூகமளித்திருந்தனர். (ம-3,60)

## ஓய்வூதிய வயதெல்லை 60 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

ஓய்வூதியத்திற்கான குறைந்தபட்ச வயதெல்லை தொடர்பான சட்டமூலம் திருத்தங்களுடன் நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதற்கமைய குறைந்தபட்ச ஓய்வூதிய வயதெல்லை 60 என திருத்தப்பட்டுள்ளது.

தற்போது அமுலில் உள்ள 55 வயது என்ற ஓய்வூதிய வயதெல்லை 60 வயது வரை நீடிக்கப்பட்டாலும், ஊழியர் ஒருவர் தனது சுய விருப்பின் அடிப்படையில் 55 வயதில் ஊழியர் சேமலாப நிதியை பெற்றுக் கொள்ள முடியும் என தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் நேற்று அறிவித்தார். (ம-3)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

"கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்."
-இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கடற்கரை வீதி பழைய பூங்கா வீதிச் சந்தி, டேவிட் வீதி கடற்கரைச் சந்தி, குருநகர் கடற்கரைவீதி, நெபாட் வலைத்தொழிற்சாலை, ஸ்ரீலங்கா ஐஸ் தொழிற்சாலை, ஏ.ரி.ஐ. குருநகர் கட்டட திணைக்களம், சீனோர், குருநகர் ஐஸ் தொழிற்சாலை கடற்கரை வீதி, பாரதிதாசன் வாசிகசாலை, இலகடி, இன்பருட்டி, இன்பருட்டி பிள்ளையார் கோவில், காந்தியூர் மாலுசந்தி, மந்திகை அம்மன் கோவில், முத்துமாரியம்மன் கோவில் அல்வாய், நாவலடி, ஸ்ரீலங்கா பாடசாலையடி, வியாபாரி மூலை, தொலைத்தொடர்பு மாலுசந்தி, ஐஸ் தொழிற்சாலை சுப்பர் மடம், மந்திகை மருத்துவமனை ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** கேப்பாபிலவு வீதி, புதுக்குடியிருப்பு, ஹைட்ராமணி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி-5)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

**அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களை அடையும் உபாயங்கள்**

கண்ணுக்கு அணிகலம் தாட்சண்யம். மனதிற்கு அணிகலம் தியானம். இரை தேடுவதோடு இறையும் தேடு. பிறரைக் கெடுத்து தான் மட்டும் வாழ நினைத்தல் பேராசை. தான் மட்டும் வாழ நினைத்தல் பற்று. தானும் தன் இனமும் தன் நாடும் வாழ நினைத்தல் அன்பு. சாரசரம் வாழ நினைத்தல் அருள்எனப்படும். தானே சொல்வதால் குறைதல்- புண்ணியமும் பாவமுமே. (தொடரும்)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### பிரச்சினையின் வால்

குருஜி: தீர்வு காண முடியாத பிரச்சினை என்று எதுவுமில்லை.

யாரோ ஒருவர்: அத்தகைய பிரச்சினைகள் சில என்னிடம் உள்ளன. அவற்றை உங்களுக்கு தருகிறேன் (சிரிப்பு)

குருஜி: உங்களுக்கு ஒரு பிரச்சினை இருந்தது. அதைத் தீர்வு செய்யமுடியாது என்று நீங்கள் எண்ணினால், அதை ஏற்றுக்கொண்டு விட்டீர்கள். அப்படியானால் அது ஒரு பிரச்சினையே அல்ல, மெய்நிகழ்வு ஆகிவிடுகிறது.

உதாரணமாக நோர்வேயிலுள்ள சமுத்திரம் மிகவும் குளிர்ச்சியாக இருப்பது ஒரு பிரச்சினை என்று நீங்கள் எண்ணுவதாக வைத்துக் கொள்வோம். நிச்சயமாக உங்களால் சமுத்திரத்தை வெப்பமாக்க முடியாது. (தொடரும்)

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

15

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



## 3,244க்கான எகிப்திய இலக்கம்




படம் - அ(1)

## நீங்களும் முயற்சிக்கலாம் 7



ன்

பெறுமானம் என்ன?

விடை 5+80+200= 285

## எகிப்தியர்களின் படிதிலை குறிவிடு

குறிப்பு- உதாரணமாக 46206 ஐ எகிப்திய எண் முறையில் எழுதுவதானால் 4 "பத்தாயிரக் குறியீடுகளும்", 6 "ஆயிரக்குறியீடுகளும்", 2 "நூறுக்குறியீடுகளும், 6 "ஒன்றுகளும்" எழுதப்பட வேண்டும். இங்கு எழுதும் ஒழுங்குமுறை பார்க்கப் படுவதில்லை. படம் அ (2) வைப் பார்த்து எழுதும் முறையை விளங்கிக் கொள்ளலாம்.

பார்க்கும் போது புதுவிதமாக இருந்தாலும் இப்போதும் பாடசாலைகளில் சிறுவர் வகுப்புகளில் வடிவங்களுக்கு பெறுமானம் கொடுத்து மொத்தப் பெறுமானத்தை கணிக்கும்படி கேட்பது வழமையாக உள்ளது.

**எகிப்தியர்களின் எண் முறைமை இரண்டாகும். ஆரம்பத்தில் இருந்தது மறை பொருட் குறியீடு (hieroglyphs) முறையாகும். புல்தாள் மீது எழுதும் முறையைக் கண்டு பிடித்ததின் பின் எகிப்தியர்கள் பயன்படுத்திய மற்றொரு எண் முறைமை, படிநிலை எண் முறைமையாகும்.**

### எகிப்தியர்களின் படிநிலை குறியீடு எண் முறை (hieratic numerals)


புல்தாள் மீது எழுதும் முறையைக் கண்டுபிடித்ததின் பின் எகிப்தியர்கள் பயன்படுத்திய மற்றொரு எண் முறைமை, படிநிலை எண் முறைமையாகும். (hieratic numerals) இந்த முறையில் எண்களை மிகவும் சிறிய வடிவத்தில் எழுத முடிந்தது.

ஆனால் குறியீடுகளின் எண்ணிக்கை அதிகரித்ததால் இன்னும் பல குறியீடுகளை மனப்பாடம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. படிநிலை எண் முறைமையின் எண் குறியீடுகள் படம் அ (3) தரப்பட்டுள்ளன.

இதில் காட்டப்பட்ட குறியீடுகளைத் தவிர பத்தாயிரத்திற்கு ஒரு குறியீடும் நூறாயிரத்திற்கு ஒரு குறியீடும் உள்ளன.

படம் அ (2)

### எகிப்தியர் எண்முறை உதாரணங்கள்




## நீங்களும் முயற்சிக்கலாம் 6




ன்

பெறுமானம் என்ன?

விடை= 10000+1000+ 2x100+2x10+4= 11224

## எகிப்தியர் எண்முறை




படம் அ(3)


எண்கள் வலமிருந்து இடமாக எழுதப்படும். 1328 ஐச் சுட்ட 1000 இற்குரிய குறியீட்டை இட்டு அதனை அடுத்து முந்நூறுக்குரிய குறியீட்டை இட்டு தொடர்ந்து 20 இற்குரிய குறியீடும் 8 இற்குரிய குறியீடும் இடப்படுகிறது. இவ்வாறே பிறவும்.


### ஏஜியன் எண்கள் (Aegean numbers) (கி.மு. 3000-1450)

மினோவான் (Minoan) நாகரிகம் கிரீட் தீவு (Crete Island) மற்றும் பிற ஏஜியன் தீவுகளில் (Aegean Islands) வெண்கல யுக ஏஜியன் நாகரிகமாக இருந்தது, இது கி.மு. 3000 முதல் கி.மு. 1450 வளர்ச்சியுற்று இருந்தது.

அதன்பின் வீழ்ச்சி அடைந்தது. இந் நாகரிகம் ஐரோப்பாவின் முதல் மேம்பட்ட நாகரிகத்தை பிரதிபலித்ததோடு மிகப்பெரிய கட்டட வளாகங்கள், கருவிகள், கலைப்படைப்புகள், எழுதும் அமைப்புகள் மற்றும் ஒரு பெரிய வர்த்தக வலையமைப்பை விட்டுச் சென்றுள்ளது.

மினோவான் மற்றும் மைசீனிய நாகரிகங்களால் பயன்படுத்தப்பட்ட எண் முறைமை ஏஜியன் எண்கள் எனப்படுகிறது. இம் முறைமையில் உரு 1 இல் காட்டியவாறு ஐந்து குறியீடுகளைப் பயன்படுத்தி எண்கள் உருவாக்கப்படுகின்றன. உரு 2 இல் உதாரணம் தரப்பட்டுள்ளது.




(தொடரும்)

## 19 பேர் ...

வுக்கு பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13,927 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)

## + 527 ...

ச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைவாக, இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 547,873 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)

## பட்ஜெட் இன்று...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் நிதி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ, பிற்பகல் 2 மணிக்கு வரவு - செலவுத் திட்டத்தினை முன்வைத்து உரையாற்றவுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் 2ஆவது வரவு - செலவுத் திட்டம் இதுவாகும். அதேபோல நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கன்னி வரவு - செலவுத் திட்டமும் இதுவாகும்.

சுதந்திரத்திற்கு பிறகு இலங்கையில் இதுவரை 75 வரவு - செலவுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இன்று முன்வைக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டமானது 76 ஆவது வரவு - செலவுத் திட்டமாகும்.

இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரே குடும்பத்தை சேர்ந்தச் சகோதரர்கள் இருவர் நிதி அமைச்சு பதவியை வகித்து, வரவு - செலவுத் திட்டம் தாக்கல் செய்யும் முதல் சந்தர்ப்பமும் இதுவாகும். (ம-03)

## 38 பேருக்கு ...

அதில் வவுனியா மாவட்டத்தின் நான்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளையும் உள்ளடக்கியதாக வவுனியா, இராசேந்திரங்குளம் பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் 10 பேர் உட்பட 38 பேருக்கு மேலும் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-03,250)

## மாணவர் கொத் ...

தணி உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் உப தலைவர் எஸ்.ஏ.யூ.ரி குலதிலக இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், எதிர்வரும் டிசம்பர் மாதமாகும்போது நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கக்கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ம-03)

## 60 மாணவர்க ...

உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அனுராதபுரம் மாவட்டத்தில் 60 இற்கும் அதிகமான பாடசாலை மாணவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட தொற்று நோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் தேஜன் சோமதிலக தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆசிரியர்கள் பத்து பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-03)

## ராஜபக்ஷ அரசு ...

மேற்கொள்ளப்படுகின்றனவா? அல்லது மெதமுலானவில் உள்ள வீட்டின் உணவு மேசையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றவா? என்ற சந்தேகம் எழுந்திருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

நாட்டின் பொருளாதாரம் மிகப்பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளது. அத்தியாவசியப்பொருட்களின் விலைகள் பெருமளவால் அதிகரித்திருப்பது மாத்திரமன்றி பொருட்களுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டிருக்கின்றது.

மறுபுறம் அதிக மழைவீழ்ச்சி மற்றும் வெள்ளப்பெருக்குக் காரணமாக மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதுடன் அவர்கள் மத்தியில் உயிரச்சமும் ஏற்பட்டிருக்கின்றது.

குறிப்பாக பொருளாதார ரீதியில் நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருப்பதாக அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் கூறியிருக்கின்றார்.

ஆகவே இந்நெருக்கடியிலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கு அரசாங்கம் எத்தகைய செயற்றிட்டங்களை முன்வைக்கப்போகின்றது என்பதை அறிந்துகொள்வதற்காக காத்திருக்கின்றோம் என்றார். (ம-03)

## புலனாய்வாளர் ...

போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் விசேட அறிக்கையொன்றை விடுத்த அமைச்சர், ஈஸ்டர் தாக்குதலுக்கு முன்னரும் பின்னரும் சஹ்ரானின் மனைவி விசாரிக்கப்பட்டதாகவும், தனது கணவர் புலனாய்வு அதிகாரிகளை சந்தித்ததாக அவர் ஒருபோதும் குறிப்பிடவில்லை எனவும் தெரிவித்தார்.

தான் ஆதாரங்களின் பதிவுகளை ஆய்வு செய்ததாகவும் அவருடைய கணவர் உளவுத்துறை அதிகாரிகளை சந்தித்தது பற்றி எந்த ஆவணங்களும் வெளிப்படுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சஹ்ரானுக்கு புலனாய்வுப் பிரிவுகளுடன் அல்லது பாதுகாப்புப் படையினருடன் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அமைச்சர் கூறினார். (ம-03)

## உரிய அதிகாரிக ...

றும் நோய்த்தடுப்பு தொடர்பான கட்டளைச் சட்டத்தைத் திருத்தி வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்பு கட்டளைச் சட்டத்திற்கு அமைய, அதிவிசேட வர்த்தமானியினூடாக புதிய கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, முழு நாட்டிற்கும் அதிகாரம் பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவரால் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்காக பிறப்பிக்கப்படும் கட்டளைகளும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அனுமதி பெறாது ஒன்றுகூடல் செயற்பாடுகள், ஒன்றுகூடலுக்கான சந்தர்ப்பம் ஏற்படும் வகையிலான நிகழ்வுகள் என்பவற்றை நடத்தக்கூடாது என குறித்த அதிவிசேட வர்த்தமானியில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏதேனுமொரு தரப்பினரால் இவ்வாறு விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதோடு, குறித்த விதிமுறைகளை மீறும் வகையிலான செயற்பாடுகள் அல்லது நிகழ்வுகளுக்கு அதிகாரிகளால் அனுமதி வழங்கப்பட்டாலும் அவற்றில் பொது மக்கள் கலந்து கொள்ளக் கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

## பொரு...

10ஆயிரம் கோடி ரூபாய்மோசடி இடம் பெற்றுள்ளது. அது அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படும் செய்தியின் உண்மை என்ன என்பதை அரசாங்கம் தெரிவிக்கவேண்டும் என முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (ம-03)

## தமிழ்...

பாராளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், கோவிந்தன் கருணாகரம், எஸ். வினோநோகராதலிங்கம் ஆகியோர் நேற்றைய சந்திப்பில் பங்கேற்கவில்லை.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் நேற்றைய சந்திப்பில் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கின் தற்போதைய நிலைமை, இந்தியாவின் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், மாவட்ட ரீதியிலான தனித்தனியான துரித அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் நீண்டகால அபிவிருத்தி நலத்திட்டங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இந்திய வீட்டுத்திட்டம் உள்ளிட்ட முக்கிய காரணிகள் குறித்தும் இதன்போது பேசப்பட்டன. இந்திய - இலங்கை மக்களுக்கு இடையிலான தொடர்பாடல், இராமேஸ்வரம் படகு சேவை, பலாலி விமான நிலைய அபிவிருத்தி, காங்கேசன்துறை அபிவிருத்தி குறித்தும் முக்கியத்துவம் கொடுத்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. புதிய அரசமைப்பு தொடர்பிலும் இதன்போது பேசப்பட்டது. (ம-03)

## யூரியா இறக்கு ...

காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இன்று சிறுநீரக நோயாளர்களும் இரசாயன உரங்களுக்காகக் கிளர்ந்தெழுந்து வருவதாகவும் அது ஏன் என்பது தனக்குப் புரியாத புதிராகவே உள்ளது என்றும் அவர் கூறினார்.

நாட்டில் பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் காணப்படுகின்ற போதிலும் நைட்ரஜனில் பிரச்சினை காணப்படுவதாக சந்திரசேன தெரிவித்தார். (ம-03)


மெகா பவர்
திகதி 11/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0931
S 14 04 21 27 56

மஹஜன சம்பத
திகதி 2021/11/11
சீட்டிழுப்பு இலக்கம் 4583
A 7 1 2 3 3 8

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 11.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2878
R 23 40 48 77

தன நிதானய
திகதி - 2021.11.11
சீட்டிழுப்பு இலக்கம் - 613
Z 44 51 67 82

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 11/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1163
மிதுனம் 2 0 5 0 4 2

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1386
சீட்டிழுப்பு திகதி: 11.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 4,606,560
வெற்றி இலக்கங்கள் 07 37 65 76 V

சனிதா Shanida
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3721
சீட்டிழுப்பு திகதி: 11.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 4,233,020
வெற்றி இலக்கங்கள் 10 43 71 75 D

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 458
திகதி 11.11.2021
T 05 40 60 6
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,712,020
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1560
சீட்டிழுப்பு திகதி 11.11.2021
தினம் வியாழக்கிழமை
V 16 45 55 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் 69,675,979.60/=

திகதி: 11.11.2021
வெற்றி வாரம்: 3272
சுப்பர் ஜக்பொட் 5,588,651.00/=
வெற்றி இலக்கங்கள் 15 24 31 56
விருச்சிகம்
7,873,360/=

## வேலை வாய்ப்பு

யாழ். அளவெட்டியில் உள்ள ஆலய அறப்பணியில் வாழ்வாதார தொழில் முனைவோருக்கான வேலை வாய்ப்பு.

- உதவிக் கணக்காளர் - பெண் A/L வர்த்தகப்பிரிவு
- விற்பனை பிரதிநிதி (Sales Rep.) - இருபாலாரும்
- வாகன சாரதி (இலகு ரக வாகனம்) - இருபாலாரும்

தங்குமிட வசதி உண்டு. (8572)

**076 678 2239**
**075 750 9065**



## யாழ்.எம்.ஜி.ஆர் காலமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.எம்.ஜி.ஆர் என அழைக்கப்படும் கோப்பாய் இராசையா சுந்தரலிங்கம் நேற்று அதிகாலை இயற்கை எய்தினார். அவரின் இறுதிக் கிரியைகள் கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை மதியம் நடைபெற்றது.

கோப்பாய் தெற்கு மாதா கோவிலடியைச் சேர்ந்த இராசையா சுந்தரலிங்கம் (வயது -79) தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரனின் தீவிர ரசிகனாவார்.

அத்துடன் அ.தி.மு.கவின் தீவிர விசுவாசியும் ஆவார். தமிழகம் சென்று எம்.ஜி.ஆரை நேரில் சந்தித்தும் உள்ளார். (ம-3,18,33)




## SLEAS Open
## Zoom - இலவச வழிகாட்டல் வகுப்பு

பொதுஅறிவு

அனுபவம்மிக்க விரிவுரையாளர்.

**வேதநாயகம் தபேந்திரன் B.Com, PGD.PDS, MA**

12.11.2021 செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிமுதல் 9.00 மணிவரை

**Meeting ID : 966 3760 1269, Passcode : vetha**

தொடர்பு - 076 698 2219 (C-2993)

**புகையிரதநிலைய அதிபர் தெரிவுப் பரீட்சை**

21.11.2021 ஞாயிறு நடைபெறவுள்ளது. இதற்கான பொதுஅறிவு Zoom செயலி வகுப்புகள் - ஆரம்பம் 14.11.2021 ஞாயிற்றுக்கிழமை இரவு 7- 9 வரை. பதிவுகளுக்கு Whatsapp இல. 076 698 2219

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் (8574)

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். **076 825 7716** (ஆகாஸ்)

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (8573)

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2918)

0768226240 DHL


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கடமையாற்றும் திருமதி மோ.தேவதர்சினி ஆசிரியை அவர்களின் அன்புத் தந்தையார்

லயன் திரு.
**சின்னத்தம்பி செல்வநாயகம்**

தோற்றம் : 1950.09.25
மறைவு : 2021.11.09

அவர்கள் காலமானதையிட்டு பாடசாலைச் சமூகம் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/வேலணை கிழக்கு ம.வி

(8571)


## பணியாள் தேவை

யாழ். மாவட்டத்தில் ரிக்கட் விற்பனைக்கு விற்பனை உதவியாளர் தேவை. வயதெல்லை 30 - 60 வரை. மேலதிக விபரம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (8576)

**077 122 8841**

## வேலை வாய்ப்பு

யாழ். நகர் மத்தியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பூட் சிற்றி (சொக்லேட் சொப்) ஒன்றுக்கு பணியாற்றுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. (8577)

தொடர்பு
**076 986 5238**


## தவறிவிட்டது

10.11.2021 நேற்று முன்தினம் புதன் கிழமை தாலிக்கொடி ஒன்று தவறவிடப் பட்டுள்ளது. கரணவாய் மேற்கிலிருந்து கள்ளுவம் ஊடாக மண்டன் வல்லை ஊடாக செல்வச்சந்நிதி கோயிலுக்கு சென்று திரும்பி வந்து பார்க்கும்போது தாலிக்கொடி தவறவிடப்பட்டுள்ளது.

கண்டெடுத்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

**077 827 5285**
**077 662 6730**
(C-2995)

# மரண அறிவித்தல்

## திருமதி புனிதவதி பஞ்சலிங்கம்

மண்ணில்
1948.05.19

விண்ணில்
2021.11.11



சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி பஞ்சலிங்கம் நேற்று (11.11.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - விசாலாட்சி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற இளையதம்பி - பஞ்சலிங்கத்தின் அன்பு மனைவியும் பேமானந்தி (பாமினி - அபி விருத்தி உத்தியோகத்தர் ஆதார வைத்தியசாலை, சங்கானை), நந்தினி (ஆசிரியர் - யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), மைதிலி (லண்டன்), பகீரதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - தொழில்த் துறை திணைக்களம், வடக்கு மாகாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பார்த்தீபன் (நியுபேள் பசன் ஹவுஸ் - சங்கானை), விஜேந்திரன் (டிஸ்னி டிஜிற்றல் ரெக்னோலொஜி - திருநெல்வேலி), நிமலநாதன் (லண்டன்), சுபாஜினி (பிரதி முகாமையாளர் - மக்கள் வங்கி, கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சகுந்தலாதேவி, சோமசுந்தரம், தனபாலசிங்கம், யோகேஸ்வரி, பாக்கியலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அபிராம், அக்ஷயா, அகரன், மதுரா, நிதுமிதன், ஸ்ரீகவினயா, ஸ்ரீகாருண்யா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று மதியம் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். *(ராஜா பிளாசா முன்பாக)*

(8578)

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.